இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 06 | திகதி : 24.03.2019 | விலை : 30.00

## இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து கச்சதீவில் குவிந்த 9000 புனித அந்தோனியார் பக்தர்கள்



கடந்த மார்ச் மாதம் 16ம் திகதி கச்சதீவில் நடைபெற்ற தவக்கால யாத்திரையிலும் புனித அந்தோனியார் திருநாளிலும் இலங்கையிலும் இந்தியாவிலிருந்தும் 9000 வரையிலான பக்தர்கள் கலந்து இறையருள் பெற்றார்கள். யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருநாள் திருப்பலியினை தமிழ்நாடு சிவகங்கை மறைமாவட்டக் குருமுதல்வர் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட குருக்களும் இணைந்து நிறைவேற்றினார்கள்.

இத்திருவிழாவுக்காக இந்தியாவிலிருந்து குருக்கள், அருட்சகோதரிகள் உட்பட 2500 வரையிலான பக்தர்கள் வந்திருந்தார்கள். இலங்கையின் தென்பகுதியிலிருந்தும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடக்கூடியதாகும்.

நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்பணி. எமில்போல் அடிகளாரின் சிறப்பான வழிநடத்துதலில் கொண்டாடப்பட்ட இவ்விழாவினை யாழ். அரச அதிபர் தலைமையிலான அரச அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேசசபை அதிகாரிகள் மற்றும் கடற்படையினர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒருங்கிணைத்து ஒழுங்கு செய்ததோடு விழாவிலும் கலந்து சிறப்பித்தார்கள்.

## மக்கள் யாரும் கைவிடப்படாதபடி பார்த்துக்கொள்வது உங்கள் முக்கிய கடமையாகும்

### முல்லைத்தீவு மறைக்கோட்ட மேய்ப்புப்பணிச் சபை அங்குரார்ப்பணத்தில் குருமுதல்வர்



கடந்த இரண்டு ஆண்டுகட்கு முன்னதாக புதியதாக ஏற்படுத்தப்பட்ட முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் கடந்த 09.03.2019 அன்று மறைக்கோட்ட மேய்ப்புப்பணி சபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. S.A.ஜோர்ஜ் அடிகளாரால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. P.J.ஜெபரட்ணம் அடிகளார் வழிநடத்தினார்.

முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் பணியாற்றும் அனைத்து குருக்கள், துறவியரும் அனைத்து ஆலயங்களின் அருட்பணிச்சபைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் எதிர்வரும் இரண்டு ஆண்டுகட்கு பணியாற்றவுள்ள செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு அறிவுரை வழங்கிய குருமுதல்வர் மறைக்கோட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் ஆலயங்களிலும் நடைபெறும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதும், மறைக்கோட்டத் தீர்மானங்கள் அனைத்து இடங்களிலும் அமுல் படுத்தப்படுவதற்கு உதவுவதும் அவர்கள் கடமை என்று குறிப்பிட்டார். அதேவேளையில் மக்கள் பரந்து வாழும் பங்குகளில் எந்த ஒரு குடும்பமும் கவனிக்கப்படாமல், உரிமை இல்லாமல் வாழும் நிலைகள் களையப்பட்டு மக்கள் எவரும் கைவிடப்படாதபடி பார்த்துக்கொள்வது உங்கள் முக்கிய கடமையாகும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## மதங்களைக் கடந்து தமிழர் என ஒன்றிணைவோம்

### கம்பன் விழாவின் பாதுகாவலன் ஆசிரியர்





இன்று மதங்களுக்கிடையே மனக் கசப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு சில விடயங்கள் அவ்வப்போது தோன்றுகின்றன. அதற்கு சில புறக்காரணிகளும் காரணமாகலாம். நாம் எப்போதும் விழிப்பாக இருந்து நாம் தமிழர்கள் என்ற உணர்வில் வலுப் பெற்று மதங்களைக் கடந்து தமிழுக்காக உழைக்க முன் வரவேண்டும். அதற்கு கம்பன் கழகத்தின் செயற்பாடுகள் களம் அமைக்கின்றன என பாதுகாவலன் ஆசிரியரும் புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளருமாகிய அருட்பணி. எஸ். ஏ.றொஷான் அடிகளார் தெரிவித்தார். கடந்த பங்குனி 15ம் நாள் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மண்டபத்தில் நடைபெற்ற கம்பன் விழாவின் தொடக்க நாளில் மங்கள விளக்கேற்றி அருளுரை ஆற்றிய போது அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் பாதுகாவலன் ஆசிரியராகிய அருட்பணி. றொஷான் அடிகளாருக்கு முன்னாள் பிரதம நீதியரசரும் கொழும்பு கம்பன் கழக பெருந்தலைவருமாகிய மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன் அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவம் வழங்கப்பட்டது.

## ஆசிரியர்கள் மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம்



யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தினால் தவக்காலத்தை முன்னிட்டு வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கத்தோலிக்க ஆசிரியர் மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம் 16.03.2019 சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் மதியம் 12.30 மணி வரை யாழ்ப்பாணம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## கல்லாறில் புதுப்பொலிவுடன் குழந்தை இயேசு ஆலயம்



தருமபுரம் பங்கில் கல்லாறு குழந்தை இயேசு ஆலயம் வெளியூர் மற்றும் உள்ளூர் ஆலய மக்களினதும் இந்து சமய மக்களினதும் பங்களிப்போடு புனரமைப்பு செய்யப்பட்டது. இப் புனர்நிர்மாணப் பணிகளை பங்குத்தந்தை அருட்திரு அன்ரனி சில்வெஸ்ரர் அடிகளாரின் வழி காட்டலில் மேற்கொள்ளப்பட்டது. யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு P.J. ஜெபரட்ணம் அடிகள் அவர்களால் கடந்த 03.03.2019 அன்று காலை 7 மணிக்கு ஆலயம் அபிசேகம் செய்யப்பட்டுத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## புதுக்குடியிருப்புப் பங்கில் அன்பிய வாழ்வு ஆரம்பம்

எல்லாப் பங்குகளிலும் அன்பியங்கள் அமைக்கப்பட்டு அன்பிய வாழ்வு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்னும் யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டுத் தீர்மானத்துக்கு அமைய புதுக்குடியிருப்புப் பங்கில் கடந்த மாதம் 22 அன்பியங்கள் உருவாக்கப்பட்டு அன்பிய வாழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பங்குத்தந்தை அருட்பணி சுதர்சன் அடிகளாரின் அழைப்பின் பேரில் அன்பிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. லியோ ஆம்ஸ்ரோங் அடிகளின் வழி நடாத்துதலில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்களின் துணையோடு அன்பிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு பங்கின் சிறப்பை, அதன் அழகை அப்பங்கிலுள்ள அன்பிய வாழ்வை வைத்தே தீர்மானிக்க முடியும் என்று மேற்படி நிகழ்வை ஆரம்பித்து வைத்து திருப்பலி நிறைவேற்றிய யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளார் தனது மறையுரையில் குறிப்பிட்டுள்ளார். புகுக்குடியிருப்புப் பங்கின் அன்பிய வாழ்வு ஏனைய பங்குகளுக்கு முன்மாதிரிகையாக அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பொதுநிலை நற்கருணைப்பணியாளருக்கான தியானம்

எமது மறைமாவட்டத்தின் வெவ்வேறு பங்குகளில் பணியாற்றும் பொதுநிலை நற்கருணைப் பணியாளர்களுக்கான தியானம் வருகிற ஏப்ரல்மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ளது. ஆயர் இல்ல சிற்றாலயத்தில் தியானமும் தொடர்ந்து மறைக்கல்வி நிலையத்தில் ஒன்றுகூடலும் இடம்பெறும். இத்தியானத்தை மறைமாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு ஏற்பாடு செய்து நடாத்தவுள்ளது.எமது மறைமாவட்டத்தில் பல பங்குகளில் பொது நிலை நற்கருணைப் பணியாளர்களின் பணியானது இறை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு குருக்களுக்கு மேய்ப்புப்பணியில் பெரிதும் உதவுவதாகக் காணப்படுகிறது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## நிலைமாறா தலைமைத்துவம்

வருடந்தோறும் மார்ச் மாதம் 19ம் திகதி புனித சூசையப்பரின் திருவிழா பக்தியுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. புனிதரின் பெயரால் இயங்கும் எமது கத்தோலிக்க அச்சகத்திலும் இவ்விழா பக்தி பூர்வமாக கொண்டாடப்பட்டது. பல்வேறு திருவிழாக்களை பக்தியோடும், மனமகிழ்வோடும் கொண்டாடி மகிழ்கின்ற நாங்கள் அவற்றினது மறை உண்மைகளையும், அர்த்தத்தையும் உணர்ந்து கொள்ளாது அவற்றில் பங்கெடுப்போமானால் அனைத்து முயற்சிகளும் புறக்குடத்தில் வார்த்த நீராக அமைந்து விடும். இன்று எமது திருவிழாக்கள் வெறும் ஆடம்பரங்களாக, கேளிக்கைகளாக மாறி வருகின்ற கசப்பான உண்மையை ஒவ்வொருவரும் ஜீரணித்துத் தான் ஆகவேண்டும். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் கிறிஸ்து இயேசுவுடன் தொடர்புபட்ட திருவிழாக்களோ அல்லது புனிதர்களை மையப்படுத்திய திருவிழாக்களோ அவை ஏன் கொண்டாடப்படுகின்றன என்ற முழுமையான உண்மைத்தன்மையை நாம் எண்ணிப்பார்க்காமல் மனம்போன போக்கில் அவற்றை நிகழ்த்தி வருவதேயாகும். மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற பக்குவமும், உண்மையைக் கண்டறியும் நிதர்சனமும் எமது மனங்களில் ஏற்பட வேண்டும்.

புனித சூசையப்பர் குடும்ப வாழ்வில் ஆளுமை நிறைந்த தலைமைத்துவத்திற்கான முன்னுதாரணமாகத் திகழ்கின்றார். தச்சுத் தொழிலாளியான அவர் கன்னிமரியாவுக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில் கன்னி மரியா தூய ஆவியினால் கர்ப்பம் தரித்து குழந்தை இயேசுவை பெற்றெடுக்கின்றாள். எந்த வகையான மறுப்புமின்றி, சந்தேகமுமின்றி இறைவனின் சித்தத்தை ஏற்றுக்கொண்டு கன்னிமரியாவுக்குத் துணைவனாகவும், குழந்தை இயேசுவுக்கு வளர்ப்புத் தந்தையாகவும் வாழ்ந்தார். அத்துடன் நாம் எல்லோரும் வணக்கம் செலுத்துகின்ற எமக்காக இறைவனிடம் பரிந்துரைத்து வருகின்ற எம் பாதுகாவலராகவும் விளங்குகின்றார். உலகில் பிறந்த எவரும் பெற முடியாத உன்னத நிலையை சூசை அடைந்து கொண்டமைக்கு அவர் வாழ்வில் கடைப்பிடித்த புண்ணியங்களே காரணமாக அமைகின்றன.

புனித சூசையப்பரின் வாழ்வில் எளிமையும், பணிவும், இறைசித்தத்திற்கு கீழ்படியும் தன்மையும் எல்லாவற்றிற்கும் மேலாக தான் செய்யும் தொழிலின் மீது பற்றுறுதியும், குடும்பத் தலைமைத்துவத்திற்கேற்ற ஆளுமைப்பண்பும் காணப்பட்டது. குழந்தை இயேசு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார் என அவரது பிறப்பையொட்டி நாம் பாலன் பிறப்பு குடில்களை எமது இல்லங்களில் அலங்கரிக்கின்றோம். திருக்குடும்பத்தின் மனை குடிலாக எளிமையாக இருப்பினும் அதன் அகக்குடும்ப வாழ்வின் ஆன்மீகம் செழுமை மிகுதியாக இருந்தது. அத்தகைய எளிமை அவர் வாழ்விலும் இழையோடியது. இன்று நாம் மாட மாளிகைகளையும், கோபுரங்களையும், பிரமாண்டமான ஆலயங்களையும் அமைப்பதில் கருத்தாகவுள்ளோம். ஆனால் எமது அகக்குடும்ப வாழ்வும், அதன் ஆன்மீகமும் பெரும் கேள்விக்குறியாகவே அமைகின்றது. இவ்விடத்தில் புனித சூசையின் எளிமையையும் ஆன்மீகத்தையும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

தான் செய்யும் தொழிலை நேசித்தவராக அதில் பற்றுக் கொண்டவராக சூசை விளங்கினார். இன்று நாம் எமது தொழில்களை எப்படி மேற்கொள்கின்றோம்? செய்யும் தொழிலே தெய்வம் என்பதை மறந்து கடமையை கருத்திலும் எடுக்காது பதவி, பட்டம், பணம், கதிரை, இலஞ்ச ஊழல் என எமது தொழில்கள் எல்லாம் நிலை மாறி நிற்கின்றன. மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து மக்களை அடிமைகளாகக் கொண்டு வலம் வருகின்றோம். பதவியை நாம் பெருமைப்படுத்துவதை விடுத்து, பதவியால் நாம் பெருமைப்பட வேண்டுமென ஒருவனை விழுத்தி அவன் முதுகில் ஏறி நின்று வெற்றிக் கொடி நாட்டுகின்றோம். ஆனால் சூசை தனது தச்சுத் தொழிலை நேசித்து அதன் வழி தன் குடும்பத்தை வழிப்படுத்தினார். எனவே தான்தொழிலாளரின்பாதுகாவலராக அவரை நாங்கள்போற்றுகின்றோம்.

திருக்குடும்பத்தைத் தலைமை தாங்கி வழிநடத்துகின்ற ஆளுமை சூசையிடம் காணப்பட்டது. தலைமை என்பது மனித வாழ்வியலோட்டத்தில் முதன்மை மிக்க இடமாகும். அரசியல் தலைமை, சமயத் தலைமை, சமூகத் தலைமை, குடும்பத்தலைமை என மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தலைமைத்துவம் தலைநிமிர்கின்றது. இத்தலைமைத்துவங்கள் தலைமைத்துவத்திற்குரிய ஆளுமைகளை, பண்புகளை இழக்கின்ற போது அரசியல், சமயம், சமூகம், குடும்பம் அனைத்தும் ஆட்டங்காணத் தொடங்கி வீழ்ச்சியை நோக்கி நகர்கின்றது.

தலைமைத்துவங்கள் தவறியதால் தடுமாறித் தடம்புரண்ட அரசியல், சமய, சமூக, குடும்ப வரலாறுகள் எண்ணுக்கணக்கற்றவை. அரசியல் தலைமைத்துவம் அலைபாயும் போது நாடும் மக்களும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அதற்கு உதாரணம் சொல்ல வேண்டிய தேவையில்லை. சமயத் தலைமைத்துவம் சரிவுநிலை காணும்போது கடவுள் இருக்கிறானா என மனி தன் கேட்டு மனித மாண்புகளை இழக்கின்றான். குடும்பத்தலைமைத்துவம் குட்டிச்சுவராகும் போது குடும்பங்கள் குலைந்து அல்லற்படுகின்றது. குடும்பத் தலைவியர்கள் தொலைக்காட்சி நாடகங்களில் தம்மைத் தொலைத்து நிற்க, பிள்ளைகள் முகநூலில் முகம் புதைக்க இன்றைய எமது குடும்பங்களில் நிலை பற்றி விவரணம் தேவையில்லை. இவற்றுக்கெல்லாம் குடும்பத் தலைவர்களின் கவனயீனங்களும், தாமுண்டு தம் பாடுண்டு என்ற தான்தோன்றித் தனமான செயற்பாடுகளுமே காரணம் என்பது தெளிவாகின்றது. கூட்டுக்குடும்ப வாழ்வு குழி தோண்டிப் புதைக்கப்பட்டு, சமூகத்தில் சமாதிகள் கட்டியெழுப்பப்பட்டு வரும் இந்த மணிப்பொழுதில் புனித சூசையப்பரின் வழியில் நின்று எமது தலைமைத்துவங்கள் தலைநிமிருமானால் நாளைய சரித்திரம் எம் சிறப்பைப் பதிவு செய்யும். அன்றேல் மனிதப் புதைகுழிகளுக்குப் பதில் மனிதநேயப் புதைகுழிகளையும் இந்த மண்ணில் நாங்கள் தோண்டவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# தவக்கால நற்செய்தி தியானம்

யாழ் மறைமாவட்டத்தில் இறைத் தியான குழுவினர் ஒழுங்கு செய்யும் தவக்கால நற்செய்தித் தியானமானது எதிர்வரும் 28, 30,31ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இத்தியானத்தை வழிநடத்த தூத்துக்குடி இறை தியான இல்ல இயக்குநர் அருட்பணி. கலாநிதி குமார்ராஜா வருகைதரவுள்ளார். வழிபாடுகள் நடைபெறும் இடங்களும் நேரங்களும் கீழ் அட்டவணையில் காண்க.

| காலம் | பங்கு ஆலயம் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 1ம் நாள் வெள்ளி 29.03.2019 | யாழ்ப்பாணம் | இறை தியான இல்ல மண்டபம் | காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை |
| | உரும்பிராய் | புனித மிக்கேல் ஆலயம் | மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை |
| 2ம் நாள் சனி 30.03.2019 | மானிப்பாய் | புனித அந்தோனியார் ஆலயம் | காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை |
| | சில்லாலை | புனித மரியாள் ஆலயம் | மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை |
| 3ம் நாள் ஞாயிறு 31.03.2019 | பாசையூர் | புனித அந்தோனியார் ஆலயம் | காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை |
| | யாழ்ப்பாணம் | புனித மரியாள் பேராலயம் | மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை |

தினமும் இறை இரக்க ஜெபமாலை, இறைப்புகழ்ச்சி, இறைவார்த்தை பகிர்வு ஒப்புரவு அருட்சாதனம், திருப்பலி, நற்கருணை ஆராதனை, குணமளிக்கும் வழிபாடு ஆகியவை இடம்பெறும் **வருவீர்! இறை ஆசீர் பெறுவீர்!!**

# தவக்காலத் தியானமும் குணமாக்கல் ஆராதனைகளும்

இந்தியாவிலிருந்து வருகைதரும் அருட்பணி சுரேன் குழுவினரின் தவக்காலத் தியானங்களும் குணமாக்கல் ஆராதனைகளும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ம் திகதி முதல் 11ம் திகதி வரை வெவ்வேறு பங்குகளில் நடைபெறும். தவக்காலத் தியானங்களும் குணமாக்கல் ஆராதனைகளும்

**ஏப்ரல் மாதம்**

2ம் திகதி செவ்வாய் புனித நீக்கிலார் ஆலயம், நாவாந் துறை மாலை 5 .00 மணி முதல் 8.00 மணி வரை

3ம் திகதி புதன் புனித யூதா ஆலயம், இளவாலை மாலை 5.00மணி முதல் 8.00 வரை

4ம் திகதி வியாழன் லூர்து கெபி, தும்பளை மாலை 5.00 மணி முதல் 8.00 வரை

5ம் திகதி வெள்ளி இறைதியான இல்லம் காலை 9.00 முதல் 12.00 மணி வரை

திருக்குடும்ப ஆலயம், மல்வம் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

6ம் திகதி சனி பத்திமா அன்னை திருத்தலம், பண்டத்தரிப்பு காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை

புனித பேதுரு ஆலயம், மண்டைதீவு மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

7ம் திகதி ஞாயிறு புனித யுவானியார் ஆலயம், சுண்டிக்குளி காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை

புனித மரியன்னை ஆலயம், இரணைமாநகர் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

8ம் திகதி திங்கள் புனித லிகோரியார் ஆலயம், சாவகச்சேரி மாலை 5.00 மணி முதல் 8.00 வரை

9 செவ் புனித அந்தோனியார் ஆலயம், சுன்னாகம் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

10 புதன் புனித திரேசாள் ஆலயம, கிளிநொச்சி மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

11 வியாழன் புனித யூதாததேயு ஆலயம், முல்லைத்தீவு மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை.

# தீவக மறைக்கோட்ட மேய்ப்புப்பணிப் பேரவை - 2019



2019 ம் ஆண்டிற்கான தீவக மறைக்கோட்ட மேய்ப்புப்பணி பேரவை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ம. டேவிற் அடிகளாரின் தலைமையில் 09.02.2019 அன்று காலை 9.00 மணிக்கு அருட்தந்தை இரோனியஸ் அடிகளாரின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது.

அதனைத்தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் நிகழ்வு இடம் பெற்றது. தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ம. டேவிட் அடிகளாரின் தலைமையுரை ஆற்றப்பட்டது. அதில் தீவக மறைக்கோட்டத்தில் யாழ் மறை மாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டுத் தீர்மானங்கள் சிறப்பாக இயங்கிக்கொண்டு இருப்பதாகத் தெரிவித்ததோடு, புதிய துறவற சபையினருடைய பங்களிப்பு தீவகத்திற்குக் கிடைத்த வரப்பிசாதம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அருட்தந்தை ம.வி.இ.ரவிச்சந்திரன் அடிகளாரால் மேய்ப்புப்பணிப் பேரவையின் தன்மைகள் மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றி ஆழமாக எடுத்தியம்பப்பட்டது.

பின்னர் 2019 ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. அதில் செயலாளராக கரம்பன் பங்கைச் சேர்ந்த திரு. கு. கிளறன்ஸ் அவர்களும் பொருளாளராக மண்டைதீவுப் பங்கைச் சேர்ந்த திரு. குணபாலன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் ஒவ்வொரு பங்கிற்கான பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதன் படி நெடுந்தீவுப் பங்கிற்கு செபமாலையும், ஊர்காவற்றுறைப் பங்கிற்கு ஞா.சுதாவும், சாட்டிப் பங்கிற்கு ஸ்ரெலாவும் புங்குடுதீவு பங்கிற்கு மீரா பரமேஸ்சும் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் தீவக மறைக்கோட்ட முதல்வருடைய விசேட தெரிவிலே பாடசாலை அதிபர் திரு.றொகான் அவர்களும் சட்டத்தரணி செல்வி. செ.கிறிஸ்ரபெலினா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டிற்கான வேலைத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதில் பங்கு தொடர்பான வேலைத்திட்டம், மறைக்கோட்டம் தொடர்பான வேலைத் திட்டம், மறைமாவட்ட ரீதியான வேலைத்திட்டம் என்பன கலந்துரையாடப்பட்டது.

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குரு அருட்பணி ஆர்.விஜின்ரஸ் அடிகளாரின் அன்புத் தந்தையார் திரு.எம்.சி.இராஜநாயகம் அவர்கள் கடந்த 18.03.2019 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

பாதுகாவலன் குடும்பம்.

# நீங்கள் தயாரா?



தவக்காலத்தின் 40 நாட்கள் இறை அருளின் காலமாகவும் எமது மனத்துயருக்கும் மனமாற்றத்துக் கும், பாவ அறிக்கை மற்றும் பாவப் பரிகாரத்துக்கும் உரிய சந்தர்ப்பமாகவும் எமக்குக் கொடுக்கப்படுகின்றது. எமது அதிவந்தனைக்குரிய யாழ் மறைமாவட்ட ஆயர் தமது தவக்காலச் சுற்றுமடலில் கூறியது போல எமது நெற்றியில் விபூதிப் புதனன்று இடப்பட்ட சாம்பல் மனத்துயர் மற்றும் இவ்வுலகின் நிலையாமை பற்றி நாம் ஆழ்மாகச் சிந்தித்துத் தீர்க்கமான முடிவெடுக்க இக்காலம் எம்மை அழைக்கின்றது.

இந்நாட்களில் இறைவார்த்தைக்குச் செவி மடுத்து அவரது கட்டளைகள் அனைத்தையும் கடைப் பிடிக்க வேண்டும் என்று இணைச்சட்ட நூல் 28:1-2 கூறுகின்றது. "தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்" (லேவி 19:1) என்று லேவியர் நூல் 19ம் பிரிவு முழுவதும் எடுத்துக் கூறுகின்றது. எனவே இந்நாட்கள் எம்மை முழுவதும் புடமிட்டுத் தூய்மைப்படுத்தி அயலவரோடும் இறை வனோடும் ஒப்புரவாகி நம்பிக்கையை ஆழப்படுத்தும் நாட்களாகும். மேலும் நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசு 24:15) என்று மிக மிக உறுதியாகத் தீர்மானம் செய்யும் காலமுமாகும்.

அன்றாடம் சடுதி மரணங்கள் ஏராளம் நிகழ்ந்து கொண்டிருக்க நாள்தோறும் விடியற் காலையில் எமக்கு உயிர்ப்பிச்சை தருகி றார் இறைவன். எம் ஒவ்வொருவரையும் புதிய படைப்புக்களாக மாற்றுகின்றார். ஒவ்வொரு நாளும் புதிய செல்கள் எமது உடலில் உருவாகின்றன. நாம் நாள்தோறும் புதிதாக மாறுகின்றோம். ஒவ்வொரு நாளும் புதிய நாளாக எமக்குத் தரப்படுகின்றது.

கடந்துபோன நாட்களை நாம் பாழாக்கியது போலப் புதிய நாட்களையும் எமது பாவங்களால் பாழாக்கக்கூடாது. ஒவ்வொரு உலகப் படைப்புக்களை யும் புதிதாக நாள்தோறும் மாற்றுகின்றார் இறைவன். நேற்று இருந்தவை இன்று இல்லை. இன்று இருப் பவை நாளை இருக்கப்போவதில்லை. எனவே அன் றாடம் புதிய வாழ்வுக்கு நாம் கடந்து செல்ல வேண்டும். ஆகவே தான் "முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள். முற்கால நிகழ்ச்சி பற்றிச் சிந்திக்காதிருங்கள். இதோ புதுச் செயல் ஒன்றைநான் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றி விட்டது. நீ அதைக் கூர்ந்து கவனிக்க வில்லையா?" (எசா 43:18-19) என்று கூறுகிறார் இறைவனாகிய ஆண்டவர்.

**அருட்பணி. கு.யே.அன்ரனிபாலா**

எம்முன் இருக்கும் பாவமும் பாவத்திற்கு ஏதுவான காரணிகளுமே எம்மை மீண்டும் பழைய நிலைகளுக்கு இட்டுச் சென்று நோயாளர்கள் ஆக்குகின்றன. எனவே மனந்திருந்தியவர்களுக் கேற்ற செயல்களைச் செய்து காட்டுங்கள் என அழைப்பு விடுக்கிறார் திருமுழுக்கு யோவான். "விரியன்பாம்புக் குட்டிகளே" என்னும் கடுமையான வார்த்தைகளால் எம் எல்லோரையம் சாடுகின்றார். இறைவன் பாலை நிலத்தில் அவருக்குக் கொடுத்த பயிற்சி, அவரது தவ வாழ்வு, அவரது வார்த்தைகள் அக்கால மக்களுக்கு சாட்டையடியாக அமையவேண்டியிருந்தன.

"ஏற்கெனவே மரங்களின் வேரருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்." (மத். 3:10) என்று எச்சரிக்கை விடுக்கின்றார். அதே வேளை தோட்டத் தொழிலாளியாகிய இயேசு தோட்டச் சொந்தக்காரனாகிய தந்தை இறைவனிடம் எமக்காகப் பரிந்து பேசுகின்றார். "ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டு வையும். நான் இதைச்சுற்றிலும் கொத்தி எரு போடு வேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி. இல்லையானால் இதை வெட்டி விடலாம்" (லூக்.13:8-9) என்று எமக்காக நாள்தோறும்பரிந்து பேசுகின்றார்.



**நாம் இக்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத விடயங்கள் மூன்று**

1. மனத்துயருடன் கூடிய தீர்மானம்
2. பாவ அறிக்கை
3. பாவப்பரிகாரம்

முதலாவதாக நற்கருணை ஆண்டவருக்கு முன்பு கூடிய நேரம் அமர்ந்திருந்து நாம் செய்த பாவங்களை எமக்கு நினைவுபடுத்தும்படி இயேசுவிடமே உருக்கமாக மன்றாடுதல். துரோகி யாக, நன்றி கெட்ட பாவி யாக, மாறிவிட்டேனே என்று மனங்கசிந்து அழுது துயரப்படுதல். இனிமேல் பாவம் செய்யமாட்டேன் என்று உறுதியான தீர்மானம் செய்தல்.

இரண்டாவதாக இறை இரக்கத்தின் அரியணை யாகிய பாவ அறிக்கைத் தொட்டியில் இயேசுவின் பதிலாளராய் அமர்ந்திருக்கும் குருவிடம் சென்று வாயினால் பாவ அறிக்கை செய்தல். இக்காலத்தில் இரசாயன உணவுகளால் பலவீனப்பட்ட எம்மிடம் உள்ள கவனயீனம் என்னவென்றால் பாவங்களை நினைவில் வைத்திருப்பதில்லை. நற்கருணையின் முன்பும் பாவ அறிக்கையின் போதும், வகை தொகையோடு பாவங்களை நினைவுக்குக் கொண்டு வந்து, குருவிடம் நேரமெடுத்து ஆறுதலாக அவசரப்படாமல் அறிக்கையிட வேண்டும். இங்கேதான் நாங்களெல்லொரும் பிழை விடுகின்றோம். அதாவது யார் யாருக்கு எதிராக, என்னென்ன பாவங்களை, எத்தனை எத்தனை தடவைகள், எப்போது எப்போது செய்தேன் என்னும் நான்கு விடயங்களை அடிப்படை யாகக் கொண்டு மனத்துயரும், பாவ அறிக்கையும், பாவப் பரிகாரமும் இடம்பெறவேண்டும்.

பொய் சொன்னேன், களவெடுத்தேன், வேறொன்றும் இல்லைச் சுவாமி எனவும், நான் என்ன பாவம் செய்தேன் சுவாமி எனவும், ஏமாற்றுப் பாவ அறிக்கை செய்ய முற்படுவது, மீண்டும் ஒரு தடவை பாவம் செய்வதற்குச் சமம். இது நல்ல பாவ அறிக்கையல்ல. மாறாக கள்ளப் பாவ அறிக்கை ஆகும். ஏன் நாம் கடவுளையும், மனிதர்களையும் எம்மையும் ஏமாற்ற வேண்டும்? எனவே நல்ல பாவ அறிக்கை செய்ய வேண்டுமேயானால் திகதி, நாள், நேரம், ஆள், இடம், பொருள் என்பவற்றை நினைவிற் கொண்டு அக்கு வேறு ஆணிவேராக ஒப்புவிக்கப்பட வேண்டும். ஏனென்றால்எமது பாவங்களால் மானிட வரலாறும் இறைவனால் படைப்பட்டு நல்லதெனக் காணப்பட்ட இயற்கையும் காயப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு எமது கள்ளமில்லாத வெளிப்படைத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் இறைவன் எம்மை மன் னித்து குருமூலம் பாவப் பொறுத்தல் ஆசீர் அருள்வார். ஊதாரி மைந்தன் போன்று நற்கருணை முன்பு கண்ணீர் சிந்தி மனத் துயரடைந்து அப்பா நான் மனம் வருந்தி வருகின்றேன் என்றழைத்து குருவி டம் "வாயினால்" அறிக்கையிட்டு மன்னிப்புப்பெற்ற நாம் மூன்றாவதாக சக்கேயு தன் உடைமைகள் முழுவதை யும் மீளக் கொடுத்து மீட் பைப் பெற்றது போலப் பாவப் பரிகார முயற்சியில் ஈடு பட வேண்டும். ஏனென்றால் நாங்கள் செய்த புண் ணியங்கள் எம்மோடு கூட வரும். அவை அழியாது. எனவே நாம் செய்த பாவங்களுக்கு நாம் மன்னிப்புப் பெற்றாலும் அவை பலருக்கு இவ்வுலகில் கெடுதி செய்து கொண்டிருக்கின்றன. எனவே நாம் இயேசுவின் பாவப் பரிகாரத்தில் இணையாவிடில் அவற்றிற்கும் அழிவில்லை இவ்வுலகிலே அலையாகச் சஞ்சரிக்கும்.

எனவே எமக்காகத் தந்தையிடம் பரிந்து பேசும் இயேசுவின் இரக்கத்தையும், அவரது இரத்தத் தின் பலன்களையும் வீணாக்காமல் உடன டியாக எழுந்து சென்று கல்லாலான இதயத்தை எடுத்து விட்டு சதை யாலான இதயத்தைப் (எச. 36:26) பொருத்தி பாஸ்கா மறை பொருளை மகிழ்வுடன் கொண்டாட நான் தயார்; நீங்கள் தயாரா...............?

## தவம் செய்ய




இறைவன் மண்ணுலகில் மனிதரை உருவாக்கி யதற்காக மனம் நொந்து வருந்தி அவர் உள்ளம் துயரமடைந்தது ஏன்? எதற்காக? அதற்கு கார ணம் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மனிதர்கள். இறைவன் படைத்ததன் நோக்கத்தை மறந்து பாவத்தின் மேல் நாட்டம் கொண்டான். அன்று ஏவாள் செய்த பாவம், மகன் காயின் செய்த பாவம் என்று தொடர் சங்கிலியான பாவங்கள் தொடர்ந்து வந்த சந்ததியினரைத் தாண்டி செய்த பாவங்கள் பெரும் பாவங்களாகவே பெருக்கெடுத்தன.

இறைவன் சிந்தித்தவராய் செயல் வடிவம் கொடுக்கவே இறங்கினார். இறைவனே மறு அவதார மெடுத்து மண்ணின் மனிதனாக இயேசுக்கிறிஸ்துவாக பிறந்து வாழ்ந்து நாற்பது நாள் வனாந்தரத்தில் தவம் செய்தபோது சாத்தான் இயேசுவையும் விட்டு வைக்கவில்லை. சாத்தான் மூன்று முறை இயேசுக் கிறிஸ்துவையும் சோதித்தது. இயேசுவோ இறை வல்லமையோடு மூன்று முறையும் சாத்தானைக் கடிந்து கொண்டார். வெற்றியும் கண்டார். மண்ணில் மனி தன் எப்படி எப்படி வாழவேண்டும் என்பதை தனது நடைமுறை வாழ்க்கையால் வாழ்ந்து காட்டினார்.

பாவம் செய்பவர்கள் யூதாசைப்போல் மனம் மாறாது. மாண்டு போகாது மதலேன்மரியாள் போல பாவங்களுக்கு இயேசுவின் காலடியே தஞ்சமென்று மன்னிப்பைப் பெற்று தனக்கும் மறுவாழ்வு உண்டு என்பதை உலகிற்கு உணரவைத்து வாழ்வு கொடுத்தார் இயேசு.

இயேசுக்கிறிஸ்துவின் பார்வையில் நாம் எப்படி வாழவேண்டும்...? அவருடைய சீடத்துவ வாழ்வில் நான் உண்மை அன்பில் பங்கு கொண்டு வாழ்கின்றேனா...? இல்லையே... இயேசுக்கிறிஸ்துவின் பாதையையும் இயேசுவின் பயணத்தையும் நான் மறந்து விட்டேன். மறுபடியும் பாவத்தைத் தூண் டும் சாத்தானிடம் உறவு கொண் டுள்ளேன். சாத்தானின் நோக் கமே எம்மை அழிப்பது. அதற்கு நாம் அடிமையா...? பாவத்தின் கூலி மரணம். அந்த மரணத்தை நாடி மனிதராகிய நாங்கள் செல்வதா....? மீண்டும் மீண்டும் பாவவழியை நாடுவதா...? விட்டு விட விடுபட தகுந்த காலமிது. **தபசு காலம்.**

**S.B. பீற்றர் போல் யாழ்ப்பாணம்**

*சிந்தி..! அறி....!! செயற்படு..,!!!*

கிறிஸ்தவர்களாகிய எல்லா மக்களுக்கும் இக்காலம் மிகவும் ஓர் உன்னதமான காலமாகும். அன்போடும், பொறுமையோடும், மகிமையோடும் வாழ புனிதத்தைக் கடைப்பிடிக்கும் காலமாகவே இக்காலம் அமைகிறது. மகிழ்ச்சியான காலம், மனமாற்றத்தின் காலம், எல்லோரின் வாழ்வையும் மாற்றும் மகத்தான காலம் இது. வாழும்போது நாங்கள் ஆன்மீக வாழ்வு வாழாமல் மறந்து வாழ்ந்த வாழ்வைப் புதிப்பிப்பதற்காக செபம், தவம், தானம் போன்ற நல்ல பரித்தியாகங்களை ஆன்மீக தேடலோடு பிறருக்காக விட்டுக் கொடுத்து உதவி செய்யவும், அளந்து பார்க்க முடியாத அன்பின் ஆழத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரமான இதயத்திலிருந்து அன்பை பகிர்ந்து பருகும் காலமாக மாற்றுங்கள்.

கொலை, களவு தான் பாவமென்று எண்ணி வாழ்பவர்களே! இயேசுவின் வாழ்வை தியானிக்க மறுப்பதும் மறந்திருப்பதும், எம்மைப் பெற்ற பெற்றோரை பாரமென நினைத்து வெறுத்து ஒதுக்கி வைப்பதும் தலையாய பாவமாகும்.

மனிதனே! நீ எப்போது உனது பாவங்கைளப் போக்கி அந்த பாரச்சிலுவையிலிருந்து என்னை நீ விடு விப்பாய்...? என்று இயேசுக்கிறிஸ்து பாரமான சிலு- வையோடு எம்மைப் பார்த்து கேள்வி கேட்கின்றார். நானோ...? (மௌனம்) என்னால் முடியுமா? உன்னால் முடியுமா? என்று தடுமாறாமல் என்னாலும் முடியும் உன்னாலும் முடியும் என்றே முடிவெடு. முயன்றால் முடியும். இறைசித்தத்தினால் எதுவுமே முடியும்.




அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

பெண்களை பெருமையாக மதிப்பளித்து ஒவ்வொரு ஆண்டிலும் பங்குனி மாதம் 8-ம் திகதி மகளிர் தினமாக கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொருவரின் வாழ்விலும் தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக என மறக்க முடியாத உறவாக பெண்கள் தடம் பதித்துள்ளார்கள். இதனால் தான் ஒருவரின் சொந்த நாடு கூட தாய் நாடு என்று தான் அழைக்கப்படுகின்றது. இதேபோல் நதிகள், மலைகள், புவி என முக்கியமானவை அனைத்திற்கும் பெண்களின் பெயர்கள் தான் வைக்கப்படுகின்றது.

1789ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் போது பெண்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் உரிமைகளுக்காக குரல் எழுப்பினார்கள். இதற்கு அப்போதைய அரசன் நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. இந்த செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாக பரவிட அந்நாட்டுப் பெண்களும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது. பிரான்ஸ் நாட்டின் 2வது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங் பெண்கள் வாக்குரிமை அளிக்கும் உரிமைக்கு ஒப்புதல் கொடுத்தார்.

இந்த நாள் 1848ம் ஆண்டு பங்குனி 8ம் நாளாகும். இதுவே அனைத்துலக பெண்கள் நாளாக உலகெங்கும் அமைய வித்திட்டது. பின்னர் இந்த நாள் ஐக்கிய நாடுகளி-னால் அங்கீகரிக்கப்பட்டது. மகளிர் தினம் வருடத்திற்கு ஒருமுறை வந்து போகும். இதன் உண்மையான அர்த்தத்தை எல்லாப் பெண்களும் புரிந்து கொண்டுள்ளார்களா என்பது எவரும் புரியாத புதிராகும். மக-ளிர் தினம் படித்த பெண்கள், உயர்குடியில் உயர் பதவியில் இருக்கும் பெண்கள்; அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு மட்டுமல்ல, அன்றாடம் உழைத்து வாழும் பெண்களும், எழுத படிக்காத பெண்களும் தெரிந்திருக்க வேண்டும்.

தொடர்ச்சியான போராட்டம் மூலம் தளாத முயற்சியின் பெயரால் பெண்களுக்கான வாக்குரிமை, சொத்துரிமை, விவாகரத்து உரிமை போன்ற ஜனநாயக உரிமைகளைச் சாதித்துக் கொடுத்த தினம் தான் சர்வதேச மகளிர் தினம். நம்மை முடக்கி வைக்கும் பல்வேறு மூட நம்பிக்கைகளிலிருந்தும், உறங்கிப் போன பாரம்பரியங்களிலிருந்தும் விடுபட்டு உழைக்கும் பெண்களின் உரிமைகளுக்காக விடுதலைக்காக நாம் குரல் கொடுக்க முன்வருவோம்.

**சிதைத்து வரும் பெண்களில்**
**வாழ்வை சீரமைப்போம்**
**அழகுப் பதுமைகளாக வலம் வருவதை**
**ஒதுக்குவோம்**
**சாதி மத வேற்றுமைகளை களைந்து**
**ஒன்றிணைவோம்**
**பெண்களின் மீதான பாலியல்**
**வன்கொடுமைக்கு முடிவு கட்டுவோம்**

பணி இடங்களில் இழிவாக நடத்தப்படுவதை முறியடிப்போம். எமது நாட்டில் மலையகப்பெண்களும், கிராமப்புற பெண்களும் பலவிதமான இன்னல்களை இன்றும் அனுபவித்து வருகின்றார்கள். வறுமையின் விளைவாக குடும்பக்கட்டமைப்பில் பாரிய துன்பங்களை ஒரு பெண் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட ஆயுள் முழுவதும் அவர்கள் வாய்ப்பை இழந்தவர்களாகவும், காலம் முழுவதும் வறுமையில் வாடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனை வெற்றிகொள்ள இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக வேலைவாய்ப்பு பெற்றுச் செல்கின்ற பெண்கள் அந்த நாடுகளில் எதிர் கொள்கின்ற துன்பங்கள் பிறிதொரு வடிவமாக காணப்படுகின்றது. எமது நாட்டில் ஒரு தரப்பு பெண்கள் அனைத்து உரிமைகளுடனும், நிம்மதியான வாழ்க்கை நிலையில் உள்ள அதே சமயம் மற்றொரு தரப்பினர் துன்ப துயரங்களுடன் வாழ்ந்து வரும் நிலைமை அலட்சியத்துக்குரிய விடயமல்ல.

எமது கலாசாரத்தில் "விதவைகள்" நன்மையான காரியங்கள் நடக்கும் போது முன்னுக்கு செல்ல முடியாதவர்களாக காணப்படுகின்றார்கள். இழந்த ஒருவருக்குத்தான் அதே நிலைமையில் உள்ளவரின் உணர்வை மதிக்க முடியும். இன்று எம்மத்தியில் பல வாழ்விழந்த பெண்கள் வாழ்கின்றனர். இந்த நிலைமை மாறி இவர்களும் உரிமைகளுடன் வாழ எமது சமூகத்திற்கு நெறிப்படுத்தல் வழங்க வேண்டியவர்களாக இருப்போம். எல்லோரும் மன நிறைவாக வாழ வகை செய்ய வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.



# நீர் ஒரு புதிய மனிதனாவதற்கு

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

எல்லோருக்கும் குப்பை கூழம் என்றால் என்னென்று தெரியும். தேவையற்றது. அப்புறப்படுத்திவிட நீர் நினைப்பது. இது பழைய கடிதக் குவியலாகவோ பற்றுச் சீட்டாகவோ இருக்கலாம். செவ்வாய்க்கிழமை வருவேனென்று அறிவித்துவிட்டு சனிக்கிழமை நள்ளிரவு குடி போதையில் வரும் ஒருவராகவும் இருக்கலாம்.

வெளிப்படையான குப்பைக்கும் உள்ளத்துக் குப்பைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வெளிப்படையான குப்பை உள்ளத்துக் குப்பையின் ஒரு வெளிப்பாடு. நான் நவீன மனிதன். பாரம்பரியங்களுக்கு அடிமையல்ல என்று ஒருவர் சொல்லக்கூடும். எமது உடையிலே கவலையீனமா? அதனால் என்ன? நான் நான்தான்! நான் எனது உடையல்லவே என்று சொல்லலாம். உமது அறை ஒரே குப்பையாயிருக்கலாம்? எனக்கு வீடு துப்பரவு செய்வதை விட முக்கியமான வேறு வேலைகள் உண்டு என்று சொல்லலாம். வீட்டிலுள்ள குப்பை உமக்கு ஒரு செய்தியையும் மற்றவர்களுக்கு ஒரு அடையாளத்தையும் கொடுக்கிறது. உமக்கு சுய கட்டுப்பாடு தேவை. உமது சமநிலை தளர்ந்துவிட்டது. உமது சுய மதிப்பு உயர்த்தப்படவேண்டும் என்பதே அது.

**கட்டுப்பாடு:**

வாழ்விலிருந்து குப்பைகளை அகற்றி, ஒவ்வொரு நிலையிலுமுள்ள வேண்டாதவற்றை விலக்குவது உமது சுய உறுதிப்பாட்டை நிலைவாட்டுவதற்கு ஆரோக்கியமான வழியாகும். வெளிக் குப்பை கூழங்களைத் துப்பரவு செய்வது நல்ல ஆரம்பமாகும். உமது வெளிச் சுத்தம் அகச் சுத்தத்தோடு நெருங்கிய தொடர்புடையது. உளவியலாளரின் கூற்றுப்படி எமது சிறுபராயம் தொடக்கம் உலகத்தின் உண்மை நிலையைக் (அர்த்தத்தை) கண்டுகொள்கின்றோம். அல்லது எமக்கு வேண்டிய விதத்தில் அதனை ஆக்கிக்கொள்கின்றோம்.

வெளிச் சுத்தத்தை எம்மால் பேண முடியுமென்றால் எமது வாழ்வு எமது கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்று நாம் காட்டிக்கொள்கிறோம். பல சந்தர்ப்பங்களில் எமது வாழ்வில் வெளியரங்க ஒழுங்கை நிலைநாட்டும்போது உள்ளத்தினதும் எமது உணர்வுகளினதும் உறுதிப்பாட்டை நிலை நாட்டுகிறோம். எமக்கு சுயகட்டுப்பாடு உண்டு என்று நாம் காட்டுகிறோம்.

ஒருவருடைய வாழ்வு சீர்குலைந்திருந்தால் அந்த மனிதன் சீர்குலைந்தவர் என்பதே பொருள். அதற்கான சாதாரண பதில் இரங்கத்தக்க நிலை, பொறுமையின்மை, ஏன் வெறுப்புங்கூட. உம்மோடு மற்றவர்கள் எப்படிப் பழகுவார்கள் என்று சிந்தித்துப்பாரும். உம்மோடு மரியாதையாய் பழகி உம்மை வயது வந்தவராக நடத்த விரும்பினால் உம்முடைய குப்பைத் தனங்களைக் கட்டுமீறவிடாதீர்கள். இது எளிதான உண்மையுங்கூட.

எம்மில் சிலர் எமது குப்பைத் தனங்கள் நாம் ஆக்கபூர்வமானவர்கள் அல்லது தனித்துவமானவர்கள் என்பதற்கு அடையாளம் என்று நினைக்கிறார்கள். அதை எமது கெட்டித்தனமாகவும் கருதலாம். நாம் சாதாரண செயற்பாடுகளுக்குள் முடங்கிக் கிடப்பவர்களல்ல. நாம் பகிடி விடுகிறோம். எமது அபூர்வ செயல்களைப் பார்க்கிறவர்கள் அவற்றிற்கு ஈடுகொடுக்கமுடியாமல் தத்தளிக்கிறார்கள் என்று நாம் சொல்லக்கூடும்.. ஆக்கபூர்வமான செயல்கள் இயல்பாக நடைபெறுவதில்லை. அவற்றைச் செய்வதற்கு பழக வேண்டும்.

**ஒழுங்கான வாழ்க்கை முறை:**

எமது சீர்குலைந்த நிலையைத் திருத்துவதற்கான பிழையான வழி பல நேரம் அதைத் திருத்துவதகாகப் போராடி, களைத்து சலிப்படைவது. உண்மை என்னவென்றால் ஒழுங்கான வாழ்வில் முக்கிய பிரச்சினையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் மற்றவை ஒழுங்காக வரும். எதையும் நேரம்தவறாமல் செய்யப்பழகும். குறிக்கப்பட்ட நேரத்தில் அவ்வேலை முடியவில்லையென்றால் அடுத்த குறிக்கப்பட்ட நேரத்தில் தொடரலாம். தமது சீர்குலைந்த நிலையைச் சீராக்குவதற்கு வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு ஒழுங்கைக் கையாளுவர். சிலர் தமது நண்பர்களை விருந்துக்கு அழைப்பர். இது தமது வீட்டை ஒழுங்காக வைத்திருப்பதற்கு உதவும்.

எமக்குத் தனிப்பட்ட பிரச்சினை ஏற்படும்போது சீர்குலைவுகள் அதிகரிக்கின்றன. அவ்வேளை எமது கல்வியையோ வேலையையோ தொடரமுடியாமல் அவதிப்படுகிறோம். அப்படியான நேரத்தில் உமது வழக்கமான இடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போய்வருவது உதவியாயிருக்கும். சில வேளைகளில் உமது முழு வாழ்வையும் அதாவது உமது உறவுகள், வீட்டு வாழ்வு, உள்ளார்ந்த வாழ்வு .. என்பவற்றை ஆராய்ந்து பார்ப்பது உதவி செய்யும். ஒவ்வொருவருடைய வாழ்விலும் தடை-கள் ஏற்படலாம். இத் தடைகள் எமக்கு மனச்சோர்வையும் அங்கலாய்ப்பையும் ஏற்படுத்தும். உளச்சிக்கல்கள் வெளியரங்க சிக்கல்கள் போன்று உண்மையானவை. அச்சிக்கல்களைச் சீராக்கினால் நீர் ஒரு புதிய மனிதனாக் மாறலாம்.




சீனா மழை பொழியும் வேளை நானும் எனது தோழனும் அடர்ந்த காட்டுப் பகுதி ஊடாக மாலை 7.15 மணியளவில் எம் வீட்டிற்கு சென்றபோது திடீரென ஒரு பெண் எமது வண்டியை நிறுத்தினாள். அவள் ஒன்றும் பேசவில்லை. நெற்றியில் காயத்துடன் மிகவும் பதட்டத்துடனும் தென்பட்டாள். உடனே நானும் எனது நண்பனும் வண்டியில் இருந்து இறங்கி அவள் அழைத்துச் சென்ற இடத்திற்குச் சென்றோம். அங்கே ஒரு கார் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதை அவள் தொலைவிலிருந்து காண்பித்தாள். நாங்கள் இருவரும் அவ்வண்டியின் அருகில் சென்ற போது வண்டியின் பின் ஆசனத்தில் ஒரு சிறிய குழந்தை அழுது கொண்டிருந்தது. உடனே நாம் அக்குழந்தையை தூக்கி அந்தப் பெண்ணிடம் ஒப்படைக்க அவளைப் பார்த்தபோது அவள் அங்கே இருக்கவில்லை. ஆனால் குழந்தை சாரதி ஆசனத்தைப் பார்த்து "அம்மா அம்மா" என்று ஏக்கத்தோடு அழுதது. சற்று வண்டியின் முன் பகுதியைப் பார்த்த போது எமது வண்டியை நிறுத்திய அதே பெண் இறந்து கிடந்தாள். அப்போது தான் புரிந்து கொண்டோம் தன் குழந்தையை காப்பாற்ற இறந்த பெண் எம்மை அழைத்து வந்திருக்கிறாள் என்று. அவளது தாய்மையின் அன்பைப் பார்த்து எமது உள்ளம் குமுறியது. அன்போடு நாமும் அக்குழந்தையை எடுத்துச் சென்றோம்.



# தபக்காலம்

தபக்காலம் வாழ்வுகள் மலரும்
புதுக்காலம்
நீயும் நானும் வருந்தி திருந்திட
அழைக்கும் விடியலின் காலம்
விண்ணகம் மண்ணகத்தில்
மகிமை பெறும் காலம்

வாழ்வு தரும் சுமைகள்
எண்ணில்லா சிலுவைகள்
இறக்க முடியா பாரங்கள்
பாவ மாசின் வடுக்கள்
மன்னிக்க முடியா வலிகள்
காண முடியா கொடுமைகள்

வாழ்வின் வலிகளை
நாயகனிடம் கொடுத்துவிடு
அவர் சிந்திய கண்ணீருடன்
உன் கண்ணீரும் கரையட்டும்
கொட்டும் வியர்வைத் துளிகளில்
தூயவன் சிந்திய
இரத்த வியர்வை
உன் கண்முன் பாயட்டும்
மாற்றங்கள் என்றும் வாழ்வின்
நல் ஏற்றங்கள்

தப செப தான தருமத்துடன்
தபக்காலத்தில்
நீயும் மனம் மாறி
தியாகத்தின் செம்மல்
சிந்திய கல்வாரி பாதையில்
பயணிக்க விரைந்திடு....

**றூபா அன்ரன்**
**சுவிஸ்**

---

# ஊதாரிப்பிள்ளையின் உவமை



லூக்கா - நற்செய்தி 15: 11-32

புகழ்மிகு தந்தையார்க்கு - புதல்வர்கள் இருவர் அன்பின்
அகம் மகிழ அப்பாவின் துணையில்
அன்புறவில் வளர்ந்தால்
நகம் தசை போல் மைந்தர்கள் நலமாகவே ஒருங்கிணைந்து
பகை வகை எதுவுமின்றிப் - பரிவன்புடன் வாழ்ந்தார்கள்.

தூய தந்தையார்க்கெந்தத் - தொல்லையும் கொடாமல் மக்கள்
நேயமே பொங்கும் தந்தை - நெஞ்சம் மகிழ வாழ்ந்தார்
சேயவர் இருவரிலே சிறிய மகன் பண்புகளை இழந்து
தீயவர் கூட்டத்தில் இணைந்து - தூய வாழ்வதனை இழந்தான்

அறிவில்லாதவர் சேர்கையாலே - சிறியமகன் சிந்தை மாறி
முறியப்போகும் அன்புறவுக்குள்ளே - முன் வந்து தந்தையாரை
வெறியவன் போல் சினந்து பேசி - விளைந்துள்ள தமது பங்கை
நெறிமுறையில் பங்கிட்டு - உடன் தருகவெனக் குதித்தான்

குதிப்பவன் கொதிப்படக்கும் ஸ்ரீ குறிக்கோளைக் கொண்ட தந்தை
எதிர்ப்பவன் முன்சொல்லாமல் - வழங்கினார் ஏற்ற பங்கை
மதிக்குணம் இல்லாத மைந்தன் - மள மளவென்று சொத்தை விற்று
விதிப்படி வெளிநாட்டிற்கே - விரைந்தனன் விழலாவதற்கே

குன்று போல் செல்வம் கூடக் - குந்தியே தின்றால் மாயம்
என்று எவர் சொன்னபோதும் - இருகாதும் கேளாதவர் போல்
சென்று தன் தீய வழியில் - சற்றேனும் சிந்திக்காமல்
இன்று போல் துள்ளித் துள்ளிக் - காசெல்லாம் செலவழித்தான்

பொருள் சிறப்பறியா மைந்தன் - பொருளினைத் துலைத்து விட்டு
இருள் வழி எவையென்றாலும் - எண்ணாத அவ்வழியே சென்று
மருள் வரப் பகலும் இரவும் - மறைவான வினையே நாடி
பொருள்தனைத் தொலைத்துவிட்டு - போக்கிலியாக நின்றான்

பிழைத்திட வழிகாணாமல் - பேதமுற்றுத் திகைத்து நின்றான்
உழைத்திட வேலை தேடி - ஊரெங்கும் அலைந்து திரிந்தான்
அழைத்திட யாரும் இல்லை - அழிந்திடும் மனநிலை உள்ளதாலே
மழைத்திடல் எனக் கண்ணீரால் - மனம் விட்டு அழுது நின்றான்

பன்றியை மேய்க்க அந்தப் - பண்ணையாளன் ஆணைவிட்டான்
ஒன்றியாய்ப் பன்றி மேய்க்கும் - உலைவாலும் களைப்பாலும்
பன்றிக்குத் தரும் தவிட்டை - பசிக்கென உண்டான் பின்னாள்
பன்றியின் உணவுகூட - அவனுக்குக் கிடைக்காமல் போனது

என்றவன் மனமாற்றம் பெற்று - எண்ணத்தால் எழுந்து
சென்றனன் தன்நாட்டிற்கே - சென்றவன் மீண்ட செய்தி
அன்றவன் தந்தை அறிந்து - அளவில்லா மகிழ்ச்சியாலே
நின்றவன் கன்னத்தின் மேல் - நிறைமுத்தம் வழங்கலானார்

அப்பா நான் உமக்கு முன்பும் - ஆண்டவர் முன்புமாக
தப்பாக நடந்துகெட்டேன் - தவற்றினை உணர்ந்துவிட்டேன்
துப்பாக இருந்திடாமல் - சொத்தெல்லாம் தொலைத்து விட்டேன்
அப்பாலே போ. என்றிடாமல் - அன்பு செய்வீர் உம் பிள்ளை

தந்தையர் நெகிழ்ந்தார் உள்ளம் - தம் மகன் வந்தான் என்று
சிந்தையை அள்ளுகின்ற - நிறைவான செயலே தம்பி
வந்ததை மகிழ்ந்தேன் - நடந்ததை நான் மறந்தேன்
சிந்தனை தூயதாகி - சிறப்பாக பாராட்டி நின்றார்

இறந்தவன் மிண்டு வந்தான் - என்மகன் விட்டேகி
பறந்தவன் மீண்டும் இங்கே - படர்ந்தனன் என்று கூறி
பிறந்த ஓராண்டுக் கன்றடித்து - பெருஞ்சுவைக் கறிசமைத்து
சிறப்பான விருந்து வைத்து - சீர் வரிசையாக மேற்கொண்டார்

**வன்னிவாழ் இதயம் ம. சூசைமுத்து**

---

# வாழ்க்கை வாழ்வதற்கே...

மனித வாழ்வு என்பது தூயநல் வாழ்வாக அமையவேண்டும் என்பதே இறைத் திட்டமாகும். அது மூடப்பட்ட புத்தகமாகவல்ல, திறக்கப்பட்ட அருள் காவியமாக, பல்வேறுபட்ட நிலைகளில் பாதிப்பு அடைந்து வாழ்வோருக்கு பரிவு காட்டும் ஊடகமாக அமைவதே அதன் சிறப்பாகும்.

வாழ்வது என்பது உயிர் பிழைப்பது அல்ல. மாறாக, அது அழகை, அன்பு வார்த்தையில் வடிக்கப்படுவதை வாழ்வியற் தேர்வை, புது வாழ்வு பிறப்பிப்பதை, வாழ்வியற் கொண்டாட்டத்தை, நேரான வழியில் வாழ்வதற்கான கட்டமைப்பை வெளிப்படுத்துவதாகும். நல்ல நட்பு, வாழுதலுக்கான அன்பு, பிறரை, ஏழைகளை வாழவைக்க வேண்டும் என்ற தாகம், பிறரது வாழ்வியல் உரிமை, மனித மாண்பு போன்றவற்றை வெளிப்படுத்துவதே மனித வாழ்வாகும்.

இயற்கையில் வெளிவராது புதைந்து கிடக்கும் ஞானத்தை வெளிக்கொணர முற்படுவதே இன்று அவசரமானதும் அவசியமானதுமாகும். இயற்கையைத் தற்சார்பற்றமுறையில் பகுப்பாய்வு செய்யும் விஞ்ஞானம், ஞானத்தை வெளிக்கொணர்வதிலே, மனித வாழ்வை இலகுபடுத்தலிலே, மனித உறவைப் பலப்படுத்தலிலே பெரும் பங்களிக்கின்றது. ஞானத்தின் வலிதான ஆதாரமாக விஞ்ஞான ஆய்வு விளங்குகின்றது. ஏழை-செல்வந்தன் பாகுபாடு, படித்தோன்-பாமரன் வேறுபாடு, இனத்துவேசம், மொழித்துவேசம், மதவெறி, போதைவெறி போன்ற நெருக்கடிகளிலிருந்து மனித வரலாற்றைத் தக்கவைக்க நல்லோர் அனைவரும் ஆர்வத்தோடு ஒன்றிணைந்து வாழ்வியல் இணையத்தை உருவாக்க



வேண்டும். வாழ்வியல் வியூகம் அமைத்து, சமூகத் தீமைகளை விரட்டியக்க வேண்டும். முடியாது என்பது முட்டாள்தனம். முடியும் என்பதே மூலதனம்.

உளியைச் சந்திக்காத பாறை சிற்பமாக வாய்ப்பில்லை. திட்டமிட்ட கடின உழைப்பே வாழ்வின் வெற்றிக்குத் தேவை. 1 விழுக்காடு நுண்ணறிவும் 99 விழுக்காடு கடின உழைப்பும் ஒருங்கே கொண்டு வாழ்பவனே மேதையாவான் என்று தோமாஸ் அல்வா எடிசன் வர்ணிக்கின்றார்.

வினைத்திறன்மிக்க தொடர்முயற்சியும் பயிற்சியுமே வாழ்வியல் வெற்றிக்கான படிமுறைகள். ஆசை மட்டமும் ஆக்கத்திறன் மட்டமும் ஒருங்கிணைந்து நகரும்பொழுது வாழ்வியல் வெற்றிக்கான நிகழ்தகவுண்மை அதிகரிக்கின்றது.

:"மனிதன் முழு மனிதனாக வாழுதலே இறைவனுக்கு மாட்சிமை அளிக் கின்றது" என்று மொழிந்தார் புனித ஐறேனியஸ்.

**ஞானம் வளர்வதற்கும் மனித சந்ததி தக்கவைக்கப்படுவதற்கும் தேவையான அம்சங்கள் பின்வருமாறு:**

1.குழப்பங்களைக் குறைத்தல்

**பிரபஞ்சக் குழப்பமும்** வேலையின்மையுமே குழப்பத்தின் பிரதானமான கூறுகளாகும். நிரந்தர அழிவிலிருந்து மனித சந்ததியைக் காப்பாற்றுவதற்கு புதிய சிந்தனைகளைத் தோற்று விக்க வேண்டும். புதிய வாழ்வியற் திட்டங்களை உருவாக்கவேண்டும். நேர்நோக்கில் நிதானமாகச் சிந்தித்து, எதிர்மறைச் சிந்தனைகளை முறியடித்து அமைதியை ஆக்கபூர்வமான முறையில் ஊக்கமாகக் கட்டி எழுப்பவேண்டும்.

**2. விஞ்ஞான விழிப்பூட்டல்**

கல்வியிலிருந்து மருத்துவத்திற்கு, மறை சார் ஞானத்திலிருந்து விஞ்ஞானம்சார் அறிவிற்கு, அரசியலிலிருந்து உளவியலுக்குக் கடத்திச் செல்வதற்கு சமூகக் கூறுகள் பயன்படுத்தப்பட வேண்டும். மறைசார் ஞானத்திற்கும் விஞ்ஞானம் சார் அறிவிற்கும் இடையே இருக்கக்கூடிய இடைவெளி நிரப்பப்படவேண்டும். பிரபஞ்சத்தை அன்பு செய்தல், பிரபஞ்ச அன்பினை வளர்த்தல், அதில் தெய்வீகத் தைக் காணல் ஆகியவையே இறைவன் மனிதனானதின் சாராம்சமாகும்.

**3.உலகளாவிய ஒன்றிப்பு**

உலகளாவிய ஆன்மீக விழிப்பூட்டலி லிருந்தே உலகளாவிய விழிப்பூட்டல் உதயமாகின்றது. பிரபஞ்ச இறையியலாளர் தெயார்ட்டேசார்டைன் அடிகளாரின் கூற்றுப்படி, எமது மனச்சான்று குடும்பம், நாடு, இனம் போன்ற வட்டங்களுக்கு அப்பால் வளரும்பொழுது, உண்மையான, இயல் பான, மனித ஒன்றிப்பே உண்மையின் ஆவி என்பது கண்டுபிடிக்கப்படும். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனி தர்கள் மண்ணினால் ஊட்டப்பட்டு, மண்ணிற்கே ணிரும்பவேண்டியுள் ளார்கள். மத வேறுபாடுகளைக் கடந்து குவியப்புள்ளியில் ஒன்றுசேர்தல் பிரபஞ்சச் சமநிலையைத் தோற்றுவிக்கும். ஏழைகளிடமிருந்தே ஞானத்தைக் கற்றுக் கொள்ளலாம்.-

**4.விடுதலை இயக்கங்கள்**

மறைசார் பாரம்பரியங்களில் ஞானம் காணப்படுகின்றது என்றும் யூதம், கிறிஸ்தவம் ஆகிய மறைகளின் பாரம்பரியங்களில் மறக்கப்பட்ட, துன்புற்றுவாழும் ஏழைகளில் ஞானம் ஊற்றெடுக்கின்றது என்றும் இறையியலாளர் ஸ்குமைக்கர் எடுத்தியம்புகிறார்.

படைப்பியல் ஆன்மீகம் நீதிசார் ஆன்மீகம் ஆகும். தனியாட்கள் ஆற்றல்திறன் மிக்கவர்களாய் இருப்பதால் சாதனையாளர்கள் தோன்றுகின்றார்கள். இறைவனின் சாயல் அவர்களில் உயிர்த்துடிப்புடன் காணப்படுவதால் அவர்கள் தெய்வீகத்தன்மையைச் சுவைத்து இன்புறுகின்றார்கள்.

**5. பெண்ணின விடுதலை இயக்கங்கள்**

நீதிக்கான பெண்ணின விடுதலை இயக்கங்கள் பிரபஞ்சத்தின் முழுமையான அபிவிருத்தியின் பகுதியாகும். மறுமலர்ச்சிக்கான வலுவை மனிதர் கொண்டுள்ளனர் என்ற சுயவிழிப்பூட்டல் வலைப்பின்னலாக இயற்கை விளங்குகின்றது. பிரபஞ்சத்தின் ஒருங்கிணை உணர்வு, அபிவிருத்தி, சமநிலை, நீதி போன்றவற்றின் வளர்ச்சியுறு அடை யாளங்களே விடுதலை இயக்கங்கள் ஆகும். தனியாள் மறுமலர்ச்சியையும் மக்களின் விடுதலையையும் ஆன்மீகவிடுதலை உள்ளடக்குகின்றது.

**6. நம்பிக்கை**

நம்பிக்கையில் நலிவுற்றவர்களே வசதிகளை அல்லது வன்முறைகளைத் தேடுபவர்கள் என்று உளவியலாளர் எறிக் புறொம் கருதுகின்றார். விரைவாக நம்பிக்கை இழக்கும் சமூகக் கட்டமைப்புக்குள் நாம் வாழ்ந்துவருகின்றோமா? அல்லது சுயநம்பிக்கையை, இறை நம்பிக்கையை, இயற்கைமீது நம்பிக்கையை, பிறர்மீது நம்பிக்கையை இழந்து, பலம் குறைந்து காணப்படுகின்றோமா? நன்மதிப்புபெற்று, நலமுடன், வளமுடன் வாழுதல் நாம் நம்பிக்கையோடு வாழுகிறோம் என்பதையே உறுதிப்படுத்துகின்றது.

**7.மறைசார் மறுமலர்ச்சி**

தன்னுள்ளே மறுமலர்ச்சியை உள்ளீடாகக் கொண்டுள்ள மறைகளே மறுமலர்ச்சியின் முகவர்களாக விளங்க முடியும். படைப்பினை மையப்படுத்திய ஆன்மீகத்தின் ஒருங்கிணைந்த மீள் கண்டுபிடிப்பு ஆன்மீக வெளிச்சத்திற்கு வித்திடும். அது மனித வாழ்வில் புது வாழ்விற்கான மீள்சக்தியை உருவாக்குகின்றது. மறைசாட்சிகள், ஞானிகள் உடல்சார்ந்த உலகபோக்கினை வெறுத்து, ஆன்மா சார்ந்த விண்ணக நோக்கினை முதன்மைப்படுத்தி, இறைராட்சியப் பண்புகளை,சமூக விழுமியங்களை வாழ்வாக்கினார்கள். இயேசுவுக்காக, இயேசுக்கிறிஸ்துவின் கொள்கைகளுக்காக இறப்பதில் பேரின்பம் பெற்று, பாருலக மீட்பின் வித்தாகி, பொதுமக்களின் சொத்தானார்கள்.

'கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம்' தானா? என்று மகாத்மா காந்தி கேள்வி கேட்டு, எமது சிந்தனையைக் கிளறினார். 'படைப்பில்லாது ஆன்மீகம் வெறும் மாயையாகவே மாறுகின்றது' என்று இறையியலாளர் ஸ்கிலெபெக் வருந்துகின்றார். பிரபல பிரபஞ்ச ஆய்வாளர், டோமினிக்கன் தபசி மத்தியு பொக்ஸ் 'Original Blessing' நூலில் கூறுகின்றார்:

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)**

# காவலன் கலசம்

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

## நேற்றைத் துயரங்கள் நீறாகப் பொங்குது பால்....

ஜிம்மும் டிரம்பும்
கைகுலுக்கலாமென்றால்
மோடியும் கானும்
கைகோர்க்கலாமென்றால்
பாப்பரசரும் பாப்பையாவும்
கட்டித்தழுவ முடியும் என்றால்
எம்மால் மட்டும்
ஏன் முடியவில்லை?
இன்னும்
எம்மைத்தேடி
மனிதம் வரவில்லை...

எங்கள் மூளை பற்றி
உங்களுக்கு
தெரியுமா...?
எங்கள்
முதுசம் பற்றி
உங்களுக்கு தெரியுமா...?

நாங்கள் மண்ணிலே
விதைத்து
மரத்திலே
பிடுங்கியவர்கள்...
நாங்கள்
தென்னையை வைத்து
பரம்பரையை
சொன்னவர்கள்...

நாங்கள் கைவைத்த
இடமெல்லாம்
கனி தந்தது
கால்வைத்த இடமெல்லாம்
செழித்தது

நாங்கள்
ஏரும் பூட்டினோம்
ஏரோ பிளேனும்
பூட்டினோம்

நாங்கள்
சரியாக படித்ததால்தான்
நீங்கள்
பிழையாக
இடித்தீர்கள்

நாங்கள்
சட்டத்தை படித்ததால்தான்
நீங்கள்
சரித்திரத்தை
மறந்தீர்கள்

காந்தியை
எது
சுட்டதோ
எங்களையும்
அதுதான்
சுட்டது

யார் சொன்னது
யாழ்ப்பாணத்தானுக்கு
விசுவாசமில்லையென்று
காகிள்ஸ்
லிப்ற் சொல்லும்
யாழ்ப்பாணத்தவனின்
விசுவாசம் பற்றி...
யார் சொன்னது
யாழ்ப்பாணத்தவனுக்கு
இதயமில்லையென்று
ஏ-9 வீதி சொல்லும்
யாழ்ப்பாணத்தவனின்
இதயம் துடித்தது பற்றி...

யார் சொன்னது
யாழ்ப்பாணத்தவன்
கசவாரமென்று
K.F.C. கதிரைகள்
சொல்லும்
யாழ்ப்பாணத்தவனின்
செலவுகள் பற்றி....
யார் சொன்னது
யாழ்ப்பாணத்தவன்
புண்ணியம்
செய்யவில்லையென்று
ஒவ்வொரு மாடிக்கட்டடமும்
சொல்லும்
யாழ்ப்பாணத்தவன்
கோடி புண்ணியம்
செய்தவனென்று...

நாங்கள்
விண்வெளியில்
இருக்க வேண்டியவர்கள்
விண்வெளியே
விதியென
இருக்கிறோம்

நாங்கள்
உயரத்தில்
இருக்க வேண்டியவர்கள்
ஆனால்
துயரத்தில்
இருக்கின்றோம்...

உங்களுக்கு தெரியுமா
தமிழனுக்கு
தண்ணியில்தான்
கண்டம்
ஒருவன்
தண்ணியை தடுக்கிறான்
ஒருவன்
தண்ணியை கொடுக்கிறான்
ஒருவன்
தண்ணியை அடிக்கிறான்
ஒருவன்
தண்ணியை அணைக்கிறான்
ஒருவன்
தண்ணியில் வரி வைக்கிறான்
ஒருவன்
தண்ணியில் பொறி வைக்கிறான்

ஒருவன்
தண்ணிரால் உயிர் வாழ்கிறான்
ஒருவன்
தண்ணீரால் உயிர்தாழ்கிறான்

(தொடந்தும் பால் பொங்கும்)

சட்டத்தரணி
ஜொனி மதுரநாயகம்

## லியானார் டோ டாவின்சி

(சென்ற வாரத் தொடரும்...)

வெரோக்கியோவின் பணிக்கூடத்தில் உருவானவற்றுள் பல அவரிடம் வேலை செய்தவர்களால் செய்யப்பட்டவை என வரலாறுகள் கூறுகின்றன. வாசரியின் கூற்றுப்படி, கிறிஸ்துவின் ஞானஸ்நானம் / திருமுழுக்கு என்னும் ஓவியத்தை வெரோக்கியோவும் லியொனார்டோவும் இணைந்து வரைந்தனர். இயேசுவின் உடை-யை இளம் தேவதை ஏந்தியிருப்பதையும் திருமுழுக்கு யோவான்



தன் கையால் நீரை இயேசுவின் தலையில் வார்ப்பது போன்றும் இயேசு பணி வுடனும், அருள் மிகப் பெற்றவர் போலும் அவர் அவ் ஓவியத்தில் தீட்டியுள்ளார். மேலும் வானகத் தந்தையின் கைகள் வானத்தில் தெரிவது போன்றும் தூய ஆவியின் வருகையையும் காட்டியுள்ளார். இவ் ஓவியத்தில் தந்தை, மகன், தூய ஆவி என மூன்று கடவுளும் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கவொரு அம்சமாகும். இவர் இவ்வாறு வரைந்த விதம், அவரது குருவையும் விஞ்சியதாக இருந்ததால் வெரொக்கியோ தனது தூரிகையை கீழே வைத்து விட்டு அதன் பின்னர் வரைவதையே நிறத்தி விட்டார்.

1472ம் ஆண்டு லியானார்டோ 20ம் அகவையில் மருத்துவர்களினதும், கலைஞர்களினதும் குழுவான சென். லூக் குழு வில் வல்லுனராகத் தகுதி பெற்றார். லியானார்டோ வரைந்ததாக அறியப்படும் மிகப் பழைய ஓவியம் பேனாவாலும், மையினாலும் வரையப்பட்ட ஆர்னோட் பள்ளத்தாக்கு ஓவியம் ஆகும். இது 1473ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதியிட்டு வரையப்பட்டுள்ளது.

இவர் தொழில் புரிந்த காலத்தில் இவருடைய வாழ்க்கையில் சில துன்பங்களையும் இவர் அனுபவித்திருக்கிறார். நீதிமன்றப்பதிவுகளின்படி 1476ம் ஆண்டில் சில குற்றச்சாட்டுகளில் அவர் மேல் வழக்குத் தொடரப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். 1476 முதல் 1481ம் ஆண்டு வரை இவர் புளோரன்சில் தனது சொந்த பணிக்கூடத்தை நடத்தி வந்ததாகக் கொள்ளப்படினும், 1476ம் ஆண்டு முதல் 1478ம் ஆண்டு வரை இவர் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. 1478இல் புனித பர்னாட் சிற்றாலயத்தில் The Adoration of Magi என்ற ஓவியத்தை வரையும் பணி இவருக்கு கிடைத்தது.

அ.ஸ்ரெபான் றொக்சன்
OLR பங்கு, யாழ்ப்பாணம்.

லியானோர்டோவின் பல்வேறு ஓவியங்கள் உலக அளவ-ில் பிரசித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் 1498ல் வரையப்பட்ட இயேசுவின் இறுதி இராப்போசன விருந்து மற்றும் 1503 - 1056 வரையப்பட்ட ஓவியங்கள் இன்றும் மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. மேலும் இவ் ஓவியங்கள் மர்மங்கள் நிறைந்ததாகவும் பார்ப்பதற்கு கண்களுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அமையப் பெற்றிருக்கின்றன.

1652 ல் சிதைந்த நிலையில் இருந்த ஓவியத் தின் கீழ்ப்பகுதியில் ஒரு நுழைவாயில் வழி உருவாக்கப்பட்டது . உணவறைக்கும், சமையலறைக்கும் போய் வர அவ்வழி பயன்படுத்தப்பட்டது. பின்னர் அந்த வழியைச் செங்கல் கொண்டு அடைத்துவிட்டனர். இன்று ஓவியத்தின் கீழ் அடிப்பகுதி நடுவில் வளைவு போல் அமைந்துள்ள தட்டு இவ்வாறு ஏற்பட்டதே.

1672 ல் ஓவியத்தை தட்ப வெப்பநிலையில் இருந்து காப்பதற்காக அதை ஒரு திரையால் மூடினார்கள். ஆனால் ஈரப்பசை ஓவியத்திற்கும் திரைக்கும் இடையே தங்கிப்போய் சேதத்தை இன்னும் அதிகரித்தது.

ஓவியம் சிதையத் தொடங்கியதற்கு முக்கிய காரணங்கள் அது வரையப்பட்ட சுவருக்கு பின்சுவர் ஈரமடையத் தொடங்கியதும், லியானோர்டோ கையாண்ட "உலரோவிய முறையும் " அடுப்பிற்கு அண்மையில் இருந்ததால் வெப்பநிலை மாற்றம் தொடர்ந்து ஏற்பட்டதும் மேலும் உணவறையில் இருந்து கழிவுநீர் வெளியேற்றம் மற்றும் உணவில் இருந்து எழுந்த ஆவி போன்ற கூறுகள் ஓவியத்தின் சிதைவிற்கு காரணமாகியது . (தொடரும்...)

## இளையோர் காவியம்

நீ துணிவுகளின் ஒரு பாதையில்
வாழ்க்கை விமானத்தை ஓட்டு

உன்னால் முடியாது என்ற
வார்த்தைக்குள்ளே
விடியாமல் கிடக்கிறது வாழ்க்கை

இடிமேல் இடி விழுந்தாலும்
இடியையும் தாங்கிக்கொள்வது தான்
துணிவு

பயம் இறக்கவேனும் தவி
பயந்து இறந்துவிடக்கூடாது நீ

உன் முடிவுகளை தவிடுபொடியாக்குவது
மன அறையில் நிரப்பப்பட்ட
குளங்கள்

நான் வாழ்வியல் ஆய்வில்
இறங்கியபோது
மனம் குழம்பினால்
உன்னுடைய தலைமுடிகூட
குழம்பும்

பல காரணிகள் இருந்தாலும்
மனக் குழப்பத்துக்கு முதல் காரணி
ஆராக்கியம் இல்லாத நினைவு

நல்ல நினைவுகளில் தான் இருக்கிறது
மனநோயை நிரந்தரமாய்
இல்லாமல் செய்கிற மருந்து

மனம் குழப்பத்தில் இருந்து
விடுபட்டால் தான்
நீ எடுக்கும் முடிவுகள்
நிரந்தரம்

மனம் தெளிவு பெறாத வரைக்கும்
வாழ்க்கை நகராது
ஆமை வேகத்தில் கூட

உன் நம்பிக்கை பேரில்
பலவீனத்தை உண்டாக்குவது
முரண்பாடு

நடக்குமா நடக்காதா என்பது
அல்ல
நடக்கும் என்பதுதான் நம்பிக்கை

நீ எடுக்கிற முயற்சிகள்
தோல்வி என்றால்
வழிநடத்தலிலும் இருக்கிறது தப்பு

துணிவு நம்பிக்கையில் மட்டுமல்ல
எப்படி காய் நகர்த்துவது
என்பதில்தான்
இருக்கிறது வெற்றி (தொடரும்....)

உபிரோவியன்.

### சிந்திக்க ஓர் சித்திரம்




## நண்பனுக்கு ஓர் மடல்

*அன்பு நண்பா,*

நலம் பல, நாடலும் நலன்களே. தவக்கால யாத்திரை சென்றதாக கூறியிருந்தாய். தியானங்கள், வழிபாடுகள், சிலுவைப்பாதைகள் யாவும் எமது ஆன்மீகத் தேடலாக, எமது வாழ்வின் தவறுகளை மாற்றும் செயலாக எம்மில் மாற்றம் பெற வேண்டும். இதனைச் சுற்றுலாக்களாகவோ, பொழுதுபோக்காகவோ மேற்கொண்டால் தவப்பயனும் அர்த்தம் இழந்து விடும் அல்லவா?

இன்றைய சூழலில் களவுகள் பல வடிவமாகின்றது. அதனைத் தவறு என்று யாரும் கருதுவதில்லை, இதனைத் தவறு என கற்பிப்பதில் யாரும் நாட்டம் இல்லாததால் தவறுகளை பாவம் என உணரமுடியாத சிறுவர்கள் தவறிப்போக வாய்ப்புண்டு என்பதனை நீ அறிவாய் தானே! களவாக ஒரு வீட்டினில் புகுந்து தென்னைமரத்தில் இளநீர் பிடுங்கிக் கொண்டிருந்த சிறுவர்களிடம் ஏன் யாருமில்லாத வீட்டிற்குள் சென்றீர்கள் எனக் கேட்டதும் அவர்கள் சொன்னார்கள் "நாங்கள் என்ன களவா எடுக்கிறோம். வெறும் இளநீர் தானே பிடுங்குகின்றோம். யாரும் பாவிக்காமல் வீணாகி விடுமே" என்றதுடன் சில தேங்காய்களையும் தூக்கிச் சென்றனர். சிறுவர்களின் களவை சர்வ சாதார ணமாக்கி, பழக்கப்பட்டு தவறு என புரியவைக்காத பெற்றோரும் களவெடுத்த தேங் காய்க்கு பாராட்டை பிள்ளைகளுக்கு வழங்கி நின்றனர். இந்நிலையில் சிறுவர்களை திருத்தமுடியாத குடும்பம் எப்படி நல்ல இளையோரை உருவாக்குவர்? இளையோரை உரு வாக்குவதில் உங்களைப்போன்ற இளையோர் முன்வருவதே தவக்காலத் தவப் பயனாக இருக்கட்டும்.

அன்புடன்
செ.யோசப்பாலா
உளச் சமூகச் சீராளன்

## காவலன் கலசம்

# இளைஞர் உலகம்

### புனித வளனார் அ.ம.தி. குருமடம் - கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

## இன்றைய உலகில் இளையோரின் இருப்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**இளமையின் எதிர்பார்ப்பு**

சமுதாயம் இளையோரிடம் கொண்டுள்ள எதிர்பார்ப்பைப் போலவே ஒவ்வொரு இளஞனிடமும் சமுதாயம் பற்றிய எதிர்பார்ப்புக்கள். காணப்படுகின்றன. எந்த செயற்பாடும் நிறைவு பெறுவதற்கு சக்தி தேவைப்படுகின்றது. அதைப் போலவே இளையோரும் தங்களது தேவைகளை நிறைவேற்ற சமூகத்திடமிருந்து சக்தி ஒன்றை எதிர் பார்க்கின்றார்கள். அச்சக்தி என்னவென்றால் சமூகத்தால் தான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றேன் எனும் நம்பிக்கை. அச் சக்தியின் அடிப்படையில் சமூதாயத்தை நோக்கி ஒவ்வொரு இளைஞனும் பல்வேறு எதிர்பார்ப்புக்களை கொண்டிருக்கின்றான். இவ்வாறான எதிர்பார்ப்புக்கள் முழுமைப்படுத்தப்படும் போது இளை-யோரினால் உலகம் பசுமையாக மாறும். மேலும் ஒவ்வொரு இளஞனும் தனது தனித்துவம் உலகில் உணரப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றான். இதன் விளைவாகவே இன்றைய உலகிற்கும் இளையோருக்கும் இடையிலான தொடர்பு நெருக்கமானதாக காணப்படுகிறது. இவ் எதிர்பார்ப்புக்கள் சில நேரங்களில் சமூகத்திற்கும் இளைஞர்களுக்குமிடையே பல முரண்பாடுகளை தோற்றுவிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகிறது. அதாவது பெரும்பாலான இளையோர் தமது தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்காக உலகை மாற்ற முற்படும் வேளையில் உலகம் தனது எதிர்பார்ப்புக்களுக்காக இளையோரை மாற்ற முற்படுகிறது. எனவே இவ்விரு மாபெரும் சக்திகளுக்கிடையிலான முறுகல் நிலை பிற்காலங்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்துமென ஐயமின்றி கூறலாம்.

இன்றைய உலகில் இளையோர் எதிர் நோக்கும் சவால்கள் பாலைவனத்தில் சோலைகள் இருப்பது போல் வசந்த காலத்தில் வரட்சிகள் நிலவுவதும் உலகின் நியதியே. இது போலவே மனித வாழ்வின் வசந்தகாலமாக, பொற்காலமாக கருதப்படும் இளமைப்பருவத்தை வரட்சியின் காலமாக மாற்றும் பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. இவற்றை பிரதானமாக இரண்டு வகைப்படுத்தலாம்.

**1. சூழ்நிலைக் காரணிகள்.**
**2. நற்சிந்தனைக் காரணிகள்.**



**சூழ்நிலைக் காரணிகள்**

"மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்" என்பதைப் போல எமது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப எம் வாழ்வு அமை யாத போது பல சவால்களை நாம் எதிர்நோக்குகிறோம். அதாவது பொருளாதார, சமூக, உளத் தேவைகளின் அடிப்படையில் இளையோர் எதிர்நோக்கும் சவால்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் பணக்கார குடும்பத்தில் பிறந்த ஒருவரைப் போல வாழ ஆசைப்படும்போது அங்கே ஏற்படும் முரண்பாடு ஒரு சவாலாகும். ஆனாலும் இவ்வாறான சவால்களை முயற்சியினாலும் உழைப்பினாலும் வென்று காட்டலாம். உதாரணமாக மேற் குறிப்பிட்ட சம்பவத்தையே எடுத்துக் கொண்டால் கனவுகளுடன் முயற்சியும் இணையும் போது வெற்றிவாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும். ஆனால் இவ்வாறான வெற்றிகளுக்கு சமூகத் தின் வழிகாட்டுதல் மிகவும் அவசிய மாகும்.

**நற்சிந்தனைக் காரணிகள்.**

"தன் வினை தன்னைச் சுடும்" என்பது போல இளையோரின் செயற்பாடுகளே அவர்களுக்கு வினையாகலாம். அதாவது இளையோருள் திணிக்கப்படும் சவால்கள் இவையாகும். சிறப்பாக சமூக சீரழிவுகளுக்கு அடிப்படையாக இளை-யோர் சக்தி செயற்பட ஏதுவாக அமையும் மறைமுக காரணியாக வர்த்தக சக்திகள் செயற்படுகின்றன. உதாரணமாக போதைப் பெமாற்றத்திற்காக ஒவ்வொரு இளைஞனும் தன்னை மாற்ற வேண்டும் என்பதே என் கருத்து.

**எ.ஜெனிஸ்ரன்**

## வினை விதைத்தவன் வினையறுப்பான்

சூரியன் மெல்ல மேல் எழுந்தது. கந்தனும் தன்னுடைய வயலில் வேலை கொஞ்சம் இருந்ததால் மெல்ல தன்னுடைய வேலையை தொடங்கி தன் வயலின் நெற்கதிர்களை பார்த்தான். செம்பொன் பரப்பி காற்றில் அசைவாடிக்கொண்டிருந்தது. பச்சைக் கிளிகள் நெற்பயிர்களுக்கிடையே அன்புடன் முத்தம் கொடுத்தன. இயற்கையின் அழகிலே மயங்கிப் போன கந்தன் மெய்மறந்து இறைவனைப் போற்றினான்.

சாமி என்பவன் சரியான சோம்பேறி முதுகில் சூரியன் படும்வரை நித்திரை கொண்டுவிட்டு மெல்ல வயலுக்கு வந்தான். இவனுக்கு கந்தன் மேல் பொறாமை. அதனால் சில சமயம் கந்தனின் வயலுக்குள் மாட்டை அவிட்டு விட்டு விடுவான். ஒரு நாள் கந்தன் உடல் நோயினால் வயலுக்கு வந்து உறங்கிவிட்டான். இதனைச் சாதகமாக பயன்படுத்தி தன்னிடம் இருந்த மண்ணெண்யை கந்தனின் வயலில் விசிறிவிட்டான். ஒன்று இரண்டு நாட்கள் போனதும் சாமியின் வயல் கருக ஆரம்பித்தது. சாமி என்ன இது என் வயலின் நெற்பயிர் எல்லாம் கருகிப் போகின்றதே என்று எண்ணிக் கொண்டு தான் கந்தனின் வயலில் நானே மண்ணெண்ணெய் விசிறி னேன் என்றான். பிறகு மருந்து விசிறியை திறந்து பார்த்தான் தன்னிடம் இரண்டு விசிறி வைத்திருந்த சாமி ஒன்றில் மண்ணெண்னையும் இன்னொன்றில் பயிருக்கான மருந்தும் வைத்திருந்தான். பயிருக்கான மருந்தை கந்தனின் வயலில் விசிறிவிட்டு மண்ணெண்ணையை தன் பயிர்கள் மீது விசிறி விட்டான். தன்னுடைய வினை தன்னையே சேர்ந்ததை எண்ணி சாமி மனம் நொந்தான். அன்றிலிருந்து சாமி மிகவும் கஸ்டப்பட்டு உழைக்க ஆரம்பித்தான்.

**ஆ. ராஜ்மதுசன்**

## தருவே என் வாழ்வு

மண்ணில் புதைந்து – இப்
பூமி நிழல் பெற
தன் உயிர் துறந்து
உயிர் கொடுக்கும் தருவே!
உன்னை என் வாழ்வாகக்
கொள்கிறேன்

வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு
பருவத்தையும் நீ பெறுகிறாய்
ஆனால் மகிழ்ந்து இருக்கிறாய்
வாழ்வில் ஏற்படும் அனைத்தையும்
நான் பெறுகிறேன்
ஆனால் விழ்ச்சியுறுகிறேன்

இளமையின் பொழிவால் என்றும் – நீ
பயன் கொடுக்கிறாய்
இப் பார் ஏங்கும் அளவிற்கு
இளமையின் பருவத்தில் என்றும் – நான்
துன்புறுகிறேன்
என் இயலாமையின் காரணத்தில்

பல பார்வைகள் உன்னகம்
திருப்புகிறாய் – உன்
வெற்றியின் இரகசியத்தால்
பல வெறுப்புக்களை என்னகம்
பெறுகிறேன் – என்
சோர்வின் அழிவினால்

கூறுகிறேன் என் உள்ளம் மகிழ –
உன்வாழ்வையே பற்றுகிறேன்
என் வாழ்வை மாற்ற
பாருக்காய் கொடுப்பேன்
என் வாழ்வையே
உன்னைப் போல...!

**T. அனோசன் பேட்ரம்**

## வாழ்வில் சமயோசிதம்

ஒரு கிராமத்தில் ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளை. அவன் நாள்தோறும் தனக்கென்று சில விதிமுறைகளை கொண்டு வாழ்ந்து வந்தான். அவனுடைய அப்பா தினமும் காலையில் ஒரு ரூபா பணம் கொடுப்பார். நீ என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம் இந்த பணத்தை கொண்டு என்று. ஆனால் அவன் அறிந்திருந்தான் இதை வைத்து நான் விரும்பிய எதையும் வேண்டமுடியாது என்று பையில் தினமும் அப்பணத்தை சேர்த்து வந்தான். சில நாட்கள் கடந்தன. அவன் அச்சிறுபையை எடுத்தான். அதில் சில தொகை பணங்கள் காணப்பட்டது. அதை அவன் தன் விருப்பம்போல் செலவிட்டான். மிகுதியாக 100 ரூபா பணம் வைத்திருந்தான். அக்கிராமத்தில் ரஜனி ரசிகன் கடை என்று ஒரு சி-றிய அத்தியாவசியப் பொருட்களுடன் கூடிய கடை இருந்தது. ஆகவே அவன் எண்ணினான். எதிர் வருகின்ற தன்னுடைய நண்பனின் பிறந்த தினத்தை கொண்டாட 100 பட்டாசுக்களை வேண்டிக் கொண்டு போய் தனது நண்பனை மகிழ்விக்க திரியை மூட்டி எறிந்தான். அந்த பட்டாசுகள் வெடிக்கவில்லை. ஒரு பட்டாசு மட்டும் வெடித்தது. அதனால் அக்கடைக்குச் சென்று நீங்கள் கொடுத்த பட்டாசுக்களில் ஒன்று மட்டும் தான் வெடித்தது. மீதி ஒன்றும் வெடிக்கவில்லை என்றான்.

மேலே போடப்பட்ட அறிவித்தலை வாசி என்று கடைக்காரன் சொன்னான். அங்கே "ரஜனி மார்க்கெட் என்று இருந்தது". அப்போது கடைக்காரன் சொன்னான். "ஒரு பட்டாசு வெடித்தால் நூறு பட்டாசு வெடிச்ச மாதிரி". உடனே சிறுவன் "நானும் ரஜனி ரசிகன் தான். இந்தாங்கோ ஒரு ரூபா, நான் ஒரு ரூபா கொடுத்தா நூறு ரூபா கொடுத்த மாதிரி " என்றான்.

எங்கும் எப்போதும் சமயோசிதப் புத்தி வேண்டும்.

**பொ.யூட்பிரசாந்**

## மீட்புப் பாதையில்....

"அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்" (லூக்.15:21) தவக்காலம் என்பது நாம் செய்த பாவங்களுக்கு பரிகாரம் தேடி நல் வாழ்வு வாழ்வதற்காக திருஅவையின் ஏற்பாட்டில் இந்த அருளின் காலம் ஏற்படுத்தப்பட்டது. அத்தோடு எம் வாழ்வின் பயணத்தில் ஒரு திருப்புமுனையாக அமைகிறது தவக்காலம்.

எம்மில் பலர் பல்வேறு விதமான பாவங்களைப் புரிந்திருப்போம். இக்காலத்தில் நமது பாலைவன அனுபவங்களிலிருந்து பசுமையான இடமாக இருக்கின்ற இறைவனோடு இணைய இத்தவக்காலம் தூண்டுகின்றது. நம் பாவங்களை உணர்ந்து "அப்பா" என்ற மனநிலையில் இறைவன் பால் திரும்பித் திருந்தி வருவதற்கு ஒரு பொற்காலம் இந்தத் தவக்காலம்.

எவ்வாறு ஊதாரி மகன் தன் சுகபோக வாழ்விற்கு தன் அப்பாவையும், தன் அப்பாவிடம் தனக்கிருந்த அன்பையும், உறவையும் முறித்து பிரிந்து சென்று தன்னை பாவ வாழர்விற்கு அடிமையாக்கி வாழ்ந்த பின்னர் இந்தப் பாவ வாழ்வு வாழ்வதற்குப் பதிலாக தன் அப்பாவிடம் சென்று புதுவாழ்வு வாழவும், தன் தவறுகளை எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்கவும், மீண்டும் ஒரு புதிய மனி தனாக அதுவும் தனது அப்பாவின் அன்பு மகனாக வாழவேண்டும் எனவும் ஆசைப்பட்டு தந்தையிடம் திரும்பி ஓடுகின்றான். பாவ வாழ்க்கையினால் ஏற்பட்ட துன்பங்களும், கொடூரங்களும் அநாதரவாக்கப்பட்ட நிலையும் அவனை வாட்டிய போது அவன் இவ்வாறு ஒரு முடிவு எடுக்க வேண்டி ஏற்பட்டது. பாவ வாழ்க்கை இனிப்பாக இருந்தாலும் இறுதியில் அது கசப்பிலும், கண்ணீரிலும், மரணத்திலும் தான் முடியும் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எனவே எமக்குக் கிடைத்த இத்தவக்காலத்தில் நாம் செய்த தவறுகளையும், பாவங்களையும் ஏற்று இறைவனை நோக்கி மீட்புப் பாதையில் புதிய மனதோடு ஓடுவோம். பழையன கழிந்து புதியன பிறக்கட்டும்.

**ஜோசப் விதுஷன்**

# “சிறிய வயதிலேயே கூத்துப் பாடல்களைப் பாடுவேன்”

## பெண் அண்ணாவியார் வண்ணமணி அவர்களுடன் நேர்காணல்

இளவாலையை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையினை வசிப்பிடமாகவும் கொண்ட வண்ணமணி என அழைக்கப்படும் திருமதி மேரி கொண்சாய்க் அந் தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேல் கலைத் துறையில் ஈடுபட்டு வருபவர். கூத்துப்பரம்பரையில் தோன்றிய இவர் தென் மோடிக் கூத்துமரபில் அண்ணாவியாராகத் திகழ்வதுடன் பல கூத்துக்கள், நாடகங்கள் பாடல்கள் போன்றவற்றையும் இயற்றி உள்ளார் கூத்துக்கலையை பயற்றுவிப்பதில் பெண்கள் அதிகம் ஈடுபடாத சூழலில் இவர் அதிக கவனத்துக் குரியவராகின்றார். அவரது நேர்காணலை இன்றைய கலைக்காவலனில் இணைத்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.

**கலைத்துறையில் உங்களுக்கு எவ் வாறு ஆர்வம் ஏற்பட்டதென்பதனைக் கூறமுடியுமா ?**

நான் பிறந்த இடம் போயிட்டி இள வாலை. அது ஒரு கலைக்கிராமம்.எனது பேரனார் தொமிங்கும்.பேத்தியார் மரியம் மாவும் அந்தக்காலத்திலேயே கூத்துமர பினை நன்கு அறிந்த கலைஞர்களாக இருந்தனர். அக்காலத்தில் இளவாலை யில் பாஸ்க் மேடையேற்றப்பட்ட போது எனது பேத்தியார் மரியம்மா மேடையில் ஏறி பசாம் ஒப்பாரிப்பாடல்களை பாடுவார் அத்தகைய கலைப்பரம்பரையிலேயே நான் பிறந்தேன். எனது சிறிய தந்தை, மாமன்மார்களான ராசாத்தம்பி, சிங்க ராஜா, தேவசகாயம்பிள்ளை போன்றவர் கள் எல்லோருமே சிறந்த கூத்துக்காரர்க ளாக இருந்தார்கள். அவர்கள் நடித்த கற்பலங்காரன் சங்கிலியன் எஸ்தாக்கி யார் போன்ற கூத்துக்களை சிறிய வயதி லேயே பார்த்து வந்த அனுபவமே எனக்கு கூத்து ஆர்வத்தினை ஏற்படுத்தியது. சிறிய வயதிலேயே நான் அந்தக் கூத்துப் பாடல்களைப் பாடமாக்கிப் பாடுவேன். நான் படிக்கின்ற போது பாடப்புத்தககங்க ளில் வரும் பாடல்களையும் பாடமாக்க வேண்டிய விடயங்களையும் கூத்துமெட் டுக்களிலேயே பாடிப்பழகுவேன். அந்த அனுபவம்தான் நான் பிற்பட்ட காலத்தில் கூத்துக்களை. பாடல்களை எழுதுவதற்கு காரணமாக அமைந்தது

**நீங்கள் உங்களுக்கு குருவாக யாரைக் கொள்ளுகின்றீர்கள்?**

எனக்கு என்னுடைய மாமன்மார் கள் தான் ஆசிரியர்கள். அவர்களிட மிருந்துதான் நான் கூத்துக்கலையை பயின்றேன். குறிப்பாக அண்ணாவியார் இராசாத்தம்பியைதான் பெரிய அண்ணாவி என்போம். அவர் நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை பழக்கி உள்ளார். அவர் என்னில் அதிக நேசம். எனது சந்தேகங்களையெல்லாம் அவரிடம்தான் கேட்பேன். என்னை பாடச்சொலிக் கேட் டுக் கொண்டிருப்பார் திருத்தங்களைச் சொல்லித் தருவார். கடந்த வருடம் தான் அவர் இறந்தார். கடந்த வருடம் எங்களது இளவாலைப் பங்கிலே மனோகரன் (மாமாவின் மகன்) அண்ணாவியார் சங்கிலியன் கூத்துப்பழக்கினார். அதற்கு அவர் மன்னாரில் இருந்து வருகைதந்து திருத்தங்கள் எல்லாம் சொல்லி மேடை யேற்றத்திற்கு கூட இருந்தார். அந்த கூத்து மேடையேற்றத்தில் அவரை எல் லோரும் சிறப்பாக கௌரவித்தனர். அவர் இறப்பதற்கு முதல் 22 நாட்கள் அவருடன் இருந்தேன். என்னை பாடச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பார். திரிபுடைதாளத் தினை அவர் அப்போதுதான் எனக்குச் சொல்லித்தந்தார். தொடர்ந்து சில மாதங் களிலேயே அவரது இறப்பு நிகழ்ந்தது. அவரது இழப்பு உண்மையில் ஈடு செய்யமுடியாத மிகப்பெரிய இழப்பு.

**நீங்கள் கூத்துக்களில் நடித்துள்ளீர் களா?**

நான் அதிகம் நடிக்கவில்லை. பாடல் களை பயிற்றுவிப்பதிலும் கூத்துக்களை எழுதுவதிலும்தான் அதிக கவனம் செலுத்தினேன். காரணம் நான் படித்துக்கொண்டிருந்தமை ஒரு காரணம் அத்துடன் அக்காலத்தில் பெண்கள் அதிகம் நடிப்பதில்லை ஆண்கள்தான பெண்வேடமேற்பார்கள்

**கூத்துக்களை பயிற்றுவிக்கின்ற சந்தர்ப்பம் எவ்வாறு ஏற்பட்டது.?**

என்னுடைய மாமன்மார்களோடு சேர்ந்து வளர்ந்த காரணத்தினால் எனக்கு கூத்தின் பாடல்கள் எல்லாமே தெரியும் கொச்சகம், தாழிசை,இன்னிசை, விருத்தம்.. என்று பாடல்கள் எல்லாவற் றையும் திருத்தமாகப் பாடுவேன். நான் திருமணமாகி ஆனைக்கோட்டைக்கு வந்தபோது இங்கு புனித அடைக்கல மாதா ஆலய பங்கிலும், றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் கூத்துக் களை பயிற்றுகின்ற அழைப்பு எழுந்த போதுதான் வருடாவருடம் கூத்துக்களை எழுதிப் பழக்கத்தொடங்கினேன்.

**கூத்துக்களை எப்போதிருந்து எழுதத்தொடங்கினீர்கள் ?**

ஒருதடவை ஆனைக்கோட்டை சிலுவைதாஸ் அண்ணன், சவிரி அண்ணன், ஆகியோர் அரிச்சந்திரன் கதையை கூத்தாக பாடித்தருமாறு கேட்டார்கள். அப்போது எனது மாமனார் அண்ணாவியார் இராசாத்தம்பி அவர்க ளிடம் ஆலோசனை கேட்டேன். அவர் கூத்து எழுதுவது இலகுவானதல்ல என்றும் தான் சம்பூரண அரிச்சந்திரா நாடகத்தினை எழுதுவதற்கு ஒரு புல வரை அணுகியதாகவும் அவர் ஆறு மாதங்கள் செல்லும் என்றும் அண்ணா வியார் தன்னுடன் இருக்கவேண்டுமென்



றும் கூறியதாக கூறினார். நான் அவருக்கு ‘ஏன் மாமா புலவரிடம் போனீர் கள் நான் ஒருமாதத்திற்குள் எழுது வேன்’ என்று கூறி சவாலுடன் எழுதத் தொடங்கினேன். எழுதி முடித்து மாமாவி டம் காட்டி சில திருத்தங்கள் செய்து முழுமைப்படுத்தினேன். அந்த அரிச்சந்திரன் கூத்துத் தான் நான் முதல் எழுதிய கூத்து. அதனை ஆனைக்கோட்டையில் மேடையேற்ற முற்பட்டபோது அண்ணாவிப் பிரச்சினை ஏற்பட்டதானால் மேடையேற்ற முடியாமல் போய்விட்டது. பின்னர் இளவாலையில் அதனை பயிற்றுவித்து மேடையேற்றினோம் ஊறணி, இளவாலை என பல இடங்களில் அக்கூத்து மேடையேறியது. அதற்குப்பிறகு எனக்கு எழுதுவது வாலயமானது இப்ப ஒரு கதையை தந்து கூத்தாக பாடித்தரக் கேட்டால் உடன என்னால் பாட முடியும்.

**நீங்கள் எழுதிய கூத்துக்களை கூற முடியுமா ?**

அரிச்சந்திரன். அதற்குப்பின் பழைய நாடகமாகிய க்ற்பலங்காரன் கூத்து ஒருவரிடமும் இல்லாத காரணத்தினால் எனக்கு நினைவில் நின்ற பாடல்களுடன் புதிதாகவும் பாடல்களை எழுதி முழுமைப்படுத்தினேன்.அதற்குப்பின் யூதாததேயு. யோபு மகான், மந்திரவாதியும் போதகரும் போன்ற கூத்துக்களையும். யூடித் போன்ற பல பைபிள் கதைகளையும் எழுதியுள்ளேன். பாடசாலைகளுக்காக அம்பிகாபதி, நளதமயந்தி வாலிவதம், சகுந்தலை ..போன்ற பதினைந்துக்கு மேற்பட்ட கூத்துக்களை எழுதியுள்ளேன்.

**நீங்கள் எழுதிய கூத்துக்களை நீங்களே நெறியாக்கம் செய்தீர்களா?**

ஓமோம் அதிகமாக நான்தான் பழக்கினேன் அதே நேரத்தில் எனது மாமா இராசாத்தம்பி, மற்றும் மனோ- கரன் ஆகியோரும் நெறிப்படுத்தி யுள்ளனர். நான் பழக்கும் போது எனது தம்பி அரியராசா, பேக்மன் அண்ணாவியார் போன்றோர் உதவி செய்வார்கள்.

**எங்கெல்லாம் நீங்கள் கூத்துக் களை நெறிப்படுத்தினீர்கள் ?**

ஆனைக்கோட்டைப் பங்கிலும் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் இளவாலையிலும் தான் அதிகமாக நெறிப்படுத்தினேன். பாடசாலையில் நான் தொடர்ச்சியாக கூத்துக்களை மேடையேற்றினேன். தமிழ்த்தினப் போட்டிகளுக்கும் சென்று அவர்கள் வென்று வந்தார்கள். மாணவர்களுக்காக இலக்கியக் கதைகளைத்தான் அதிகமாக எழுதி மேடையேற்றினேன். அதானால் தமிழ் விழா ஒன்றில் எனக்கு பொன் னாடை போர்த்து கௌரவம் செய்தார்கள். அத்துடன் இலங்கை வானொலியிலும் நான் பழக்கிய கூத்துக்கள் ஒலிபரப்பு செய்யப்பட்டன. தாசீசியஸ் இலங்கை வானொலியில் பணியாற்றிபோது என்னை அழைத்து கூத்துக்களை ஒலிப்பதிவு செய்யக்கேட்டார் நான் எனது மாமன்மார்களையும் இணைத்து அவர்களின் உதவியுடன்

**நேர்காணல்**
**காவலூர் யோவான்**

நான்கு கூத்துக்கள் வரை இலங்கை வானொலிக்காக பழக்கினேன் அம்பிகாபதி, நளதமயந்தி, அரிச்சந்திரா, சகுந்தலை ஆகிய கூத்துக்கள் அவ்வாறு ஒலிபரப்பு செய்யப்பட்டன.

**கூத்துக்களை விட நாடகங்களையும் எழுதியுள்ளீர்களா?**

ஓமோம் பல நாடகங்களை எழுதியுள்ளேன். அந்தந்தக் காலத்தின் சமூகப்பிரச்சனைகளை வைத்துதான் நாடகங்களை எழுதுவேன். என்னுயிர் நீதானே, நோயற்ற வாழ்வு, போகும் பாதை, சத்தியம் வெல்லும்.. என்று பல நாடகங்களை எழுதியுள்ளேன். அவை- கள் எல்லாமே சமூகப்பிரச்சனைகளை பேசுகின்ற நாடகங்கள் தான். உதாரண- மாக நான் கடைசியாக எழுதிய நாடகம் போகும் பாதை என்ற நாடகம், இன்று வாழ்க்கையில் எவ்வாறு துன்பங்கள் வருகின்றன என்பதை கருவாக வைத்து நாடகமாக்கியது. இன்றைய எங்களுடைய பிரச்சனைகளுக்கு காரணம், பேராசை. வரவுக்கு மீறிய செலவு, வீண் செலவு, கடன் லீசிங். குடிவெறி என்ற பிரச்சனைகள்தான் என்பதை அந்த நாடகத்தில் நகைச்சுவை யுடன் எழுதி நாடகமாக்கினேன் ஆனால் அது மேடையேற்றப்படவில்லை

**ஏன் மேடையேற்றப்படவில்லை ?**

இப்போது நாடகங்கள் கூத்துக்களில் ஆர்வம் மிகவும் குறைந்து விட்டது. சென்ற வருடம் ஒளிவிழாவுக்கு அந்நாடகத்தினை மேடையேற்றுவதற்காக இளவாலையில் இருந்து வந்து வாங்கிச் சென்றார்கள் நானும் கொடுத்தேன் ஆனால் பின்னர் அறிந்தேன் மேடையேற்றப்படவில்லை என்று. இங்கும் முன்பு வருடா வருடம் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டுக் கொண்டு வந்தது. ஆனால் இப்போது இல்லை. இப்பவும் ஆனைக்கோட்டை மக்கள் ஓம் என்று ஒரு சொல்லு சொன்னால் போதும் நான் வருடத்துக்கு வருடம் புதுப்புதுக் கூத்துக்களை எழுதி மேடையேற்றுவேன்.. ஆனால் இன்று ஆர்வம் குறைந்துவிட்டது.

**கூத்து, நாடகங்களைவிட உங்களின் ஆக்கப்பணிகள்..?**



நான் பாடல்கள் கட்டுரைகளையும் எழுதியுள்ளேன். ஆனைக்கோட்டை பாடசாலைக்கு வருடா வருடம் நாட்டார் பாடல்களை எழுதி பழக்கிவிடுவேன். நாட்டார் பாடல்களை எழுதுவது எங்கள் பரம்பரையில் இருந்தது. “தண்ணிக்குப் போ மகளே தலைகுனிந்து வா மகளே” என்ற பிரபலமான நாட்டார் பாடல் எனது மூத்த மாமாதான் எழுதினவர். அந்தப்பரிச்சயத்தால் நானும் பல நாட்டார் பாடல்களை எழுதியுள்ளேன். அத்துடன் பல கோவில் பாட்டுக்களையும் எழுதியுள்ளேன். உலகப் படைப்பில் இருந்து இயேசுவின் பாடுகள் உயிர்ப்பு வரை நீண்ட ஒரு பாடலை எழுதியுள்ளேன். அதில் 33 இராகங்கள் வரும். அத்துடன் பசாம் பாடல்கள், அன்னை அழுங்கல் ஒப்பாரி, சிந்தாகுலத்திரட்டு போன்ற பாடல்கள் எல்லாம் சிறப்பாக பாடுவேன்.

**நீங்கள் பெற்ற கௌரவங்கள்..?**

நான் ஒன்றையும் விரும்புகின்ற தில்லை திருமறைக்கலாமன்றம் 1993 ஆம் ஆண்டு எனக்கு அண்ணாவி பட்டம் தந்து கௌரவித்தது. பாடசாலை யில் கல்விப்பணிப்பாளர் மூலமாக கௌரவித்தனர். வேறு விருதுகளுக்கு நான் விரும்புவதில்லை. அதனால் விண்ணப்பிக்கவும் இல்லை.பிர தேச செயலகங்களில் இருந்து வந்து அழைத்தார்கள் . எனது உடல்நிலையும் சாதகமாக இல்லாததால் மறுத்து விட்டேன்.

**உங்களுடைய கூத்துக்கள் ஒன்றும் நூலாக வெளியிடப்படவில்லையா?**

இல்லை. கன கூத்துக்கள் இடப் பெயர்வோடு தொலைந்துவிட்டன. தற்போது 7 கூத்துக்கள் வரை திருத்தி எழுதி வைத்துள்ளேன். ஒன்றும் நூலாக வெளிடப்படவில்லை. அதை செய்யிறதுக்கும் ஆக்களில்லை.

**நீங்கள் இளைய சமூகத்தினருக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

கலையை விரும்பி பழகவேண்டும் கடவுள் தந்த ஆற்றல்களை திறமைகளை பயன்படுத்த வேண்டும். அது எங்கட கடமை. அத்துடன் மூத்த கலைஞர்களை மதிக்கவேண்டும் அவர்களிடமிருந்து எமது மரபுக்கலையை

# அல்லைப்பிட்டி மோசஸ்சும் (Moses) பாலைதீவு புனித அந்தோனியாரும்

பாரிஸ் நகரிலே பிரெஞ்ச் மொழியைக்(2000-2003)கற்றுக்கொண்டிருந்த போது அங்கிருந்து 17 கிலோ மீற்றர் தொலைவில். Fontenay-sous-Bois இல் அமைந்திருக்கும் அமல மரித்தியாகிகள் இல்லத்திலுள்ள நூலகத்தில் மோசசும் புனித அந்தோனியாரும் என்ற கட்டுரையை 'Petites Annales des Missionaries Oblats de Marie Immaculée' என்ற சஞ்சிகையில் வாசித்தேன். பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தைக் கட்டி எழுப்ப தனது வலைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு மறைமாவட்டத்தின் கிராமங்களைச் சுற்றிவந்து நிதி திரட்டி புனித அந்தோனியார் ஆலயத்தைக் கட்டிய சாதனை அல்லைப்பிட்டியைச் சேர்ந்த மோசஸ்சையே சேருமென்று இவரின் பங்குத்தந்யையாகவிருந்த (1924 - 1934) எமில் வியார் (OMI) எழுதியிருந்ததைப் படித்து வியந்தேன். இக் கட்டுரையை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து அருட்தந்தை லூயி பொன்னையா (OMI) அவர்களிடம் கொடுத்தேன். கட்டுரையைப் படித்த பின்பு இக் கட்டுரையை தமிழாக்கம் செய்து பாலை தீவு திருவிழாவையொட்டி பத்திரிகையில் பிரசுரிக்குமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார்.

## REV. FR. EMILIE VIARD

யார் இந்த எமில் வியார்? இவர் பிரான்ஸ் நாட்டின் றன் (Renne) மறைமாவட்டத்திலே கோபூக் என்ற கிராமத்திலே விக்டர், மரிகிய்யோ என்ற பெற்றோருக்கு 1886ம் ஆண்டு சித்திரை மாதம் 5ம் திகதி பிறந்தார். இவர் 1911ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் திகதி குருவாகத் திருநிலை பெற்றார். யாழ் மறைமாவட்டத்தில் Henri Joulain ஆயராக இருந்தபோது இலங்கை நாட்டிலே கிறிஸ்தவ விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு 1912ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தார். அங்கிருந்து மறை பணிக்காக அதிகாரிகள் இவரை யாழ் மறைமாவட்டத்திற்கு அனுப்பி வைத்தனர். இவர் தனது பணிவாழ்வை 1913 இல் ஊர்காவற்றுறையிலும், 1914 இல் அரிப்பிலும் (மன்னார்), 1916 இல் முல்லைத்தீவிலும், 1918 இல் பருத்தித்துறையிலும், 1924 இல் பாஷையூரிலும், 1924 - 1934 வரை வழி மீசாம்களிலும், 1935 இல் பள்ளிமுனையிலும், 1936 - 1942 மாதகலிலும் மேற்கொண்டார்.

தும்பளையிலும், மாதகலிலும் அமைந்திருக்கும் லூர்து அன்னையின் கெபிகள் இவர் பணியின் அழியாத சின்னங்களாக இன்றும் காட்சி தருகின்றன. 1924 - 1934 வரை இவரின் வழி மீசாம் பணிகள் சவால்கள் நிறைந்த பணிகளாகவும் பயணங்களாக அமைந்தன. இவ்வாறு சவால்கள் நிறைந்த இந்த வழி மீசாம் பணித்தளங்களில் ஒன்றாகிய அல்லைப்பிட்டி கிராமத்தில் Fr. Emile Viard, மோசஸ் என்னும் அந்தோனியார் பக்தனை சந்தித்தார். இவரின் விசுவாசம் நிறைந்த வாழ்வையும் அர்ப்பணம் நிறைந்த சேவையையும் கண்டு இவரைப் பற்றி பிரான்சில் வாழும் கத்தோலிக்கர்களும் அறிந்துகொள்ள விரும்பி இக்கட்டுரையை 'Petites Annales des Missionaries Oblats de Marie Immaculatée' என்ற சஞ்சிகையில் பிரசுரித்தார்.

அருட்பணி.தொம்மையப்பு யேசுதாசன்

பாலைதீவு திருவிழாவை முடித்துக்கொண்டு சற்றுமுன்புதான் ஆயர் இல்லம் வந்துசேர்ந்தேன். பல நாட்கள் சூரியஒளி என்னை வாட்டியதால் என்னுடல் நீர்வற்றி காய்ந்திருப்பதுபோல உணர்கின்றேன். 'தூரத்திலிருக்கும் இத்தீவிற்கு மீண்டும் எப்போது செல்வேன். இதை இறைவன் மட்டும்தான் அறிவார்'. இம்முறை எனது நெருங்கிய நண்பன் மோசஸ் பற்றி இச்சஞ்சிகையில் உங்களோடு பகிர எண்ணியுள்ளேன். இவர் வயதில் முதிர்ந்தவர். ஆனால் உடல்



வலிமை கொண்டவர். இவர் பாலைதீவிலே தனிமரமாக நின்று தன்னை உருக்குகின்றார் என்று எனக்குள் எண்ணிக்கொள்வேன். ஆனால் மறுகணம் என்மனம் சொல்லும் இல்லை இவருக்கு ஓர் குரு நண்பன் இருக்கின்றார். இவர்களிருவரும் இக்கடலை ஆளும் கடல் ஓநாய்கள் என்றும் எண்ணிக்கொள்வேன்.

75 ஆண்டுகளுக்கு முன்னர் கொழுத்தும் வெய்யிலும் மணற்பாங்குமான அல்லைப்பிட்டி என்னும் கிராமத்திலே மோசஸ் பிறந்தார். மோசஸ் திருமுழுக்குப்பெற வேண்டுமென்பதிலே இவரின் தந்தை அவசரம் காட்டினார். குழந்தை மோசேசை தோளோடு அணைத்து நிமிர்த்தும் நேரம் கனிந்து வர இவருடைய பெற்றோர் குழந்தையை எடுத்துக் கொண்டு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திற்குப் புறப்பட்டனர். கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியாரை நோக்கிய பயணம் ஆரம்பமானது. அன்று காற்று சற்று வேகமாக நின்றது.

மோசஸ்சும் அவரது பெற்றோரும் இன்னும் சில யாத்திரிகர்களும் அப் படகில் பயணம் செய்தனர். காற்றின்வேகத்தால் படகு கவிழ யாத்திரிகர்கள் எல்லோரும் கடலில் தூக்கி வீசப்பட்டனர். ஆழமற்ற கடல் என்பதால் உயிராபத்து ஏற்படவில்லை. ஒருவாறு படகை நிமிர்த்திக் கொண்டனர். ஒருமாதம் நிரம்பாத குழந்தை மோசஸ் தன் அணைப்பில் இல்லையென்பதை கண்டுகொண்ட அவரின் தாய் 'புனித அந்தோனியாரே என் குழந்தையைக் காப்பாற்றும்' என்று கதறியழுதாள். திடீரென குழந்தை மோசசின் மெல்லிய முனாங்கல் சத்தம் படகின் அருகிலுள்ள ஓர் மணல் மேட்டிலிருந்து கேட்டது. இவ்வாறுதான் புனித அந்தோனியார் மோசஸ்சை கடலில் மூழ்காது காத்தார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம் நோக்கி மீண்டும் பயணம் ஆரம்பமானது. இவர்கள் அந்தோனியாரின் பாதத்தை வந்தடைந்தார்கள். ஊர்காவற்றுறையில் பலரின் நன்மதிப்பைப் பெற்றிருந்த கோவா நாட்டைச் சேர்ந்த குருவானவர் மோசேஸ்சிற்கு திருமுழுக்கருளி அவரைப் புனித அந்தோனியாரின் பாதத்தில் ஒப்புக்கொடுத்தார். மோசஸ்சை இறைவன் காப்பாற்றிய

தற்காக ஒரு சில்வர் நாணயத்தை ஒவ்வொரு வருடமும் புனித அந்தோனியாருக்குக் கொடுப்பதாக மோசசின் தாய் வாக்களித்தார். நாட்கள் நகர்ந்தன மோசஸ் வளர்ந்தான். வாலிபனாகி ஓர் கம்பீரமுள்ள மீனவனாக மாறினான். இவன் சவால்கள் நிறைந்த பல கடல் பயணங்களை மேற்கொண்டான். இவரிடம் வீரம் மட்டுமல்ல விசுவாசமும்மலை போல் வளர்ந்தது. இவர் வளர வளர புனித அந்தோனியாரின் பக்தியும் இவனோடு கூடவே வளர்ந்தது. தினமும் புனித அந்தோனியாரின் பிரார்த்தனை செபிப்பது இவனது வாழ்வின் மகிழ்வாக மாறியது.

இவ்வாறு தனது உயிர் காத்த புனித அந்தோனியாரின் பிரசன்னமும் நட்பும் இவனது இளமைப் பருவத்தை நிரப்பியது. புனித அந்தோனியாரை நோக்கி செபிப்பதும் அவருக்காக பணத்தைச் சேமிப்பதும் இவனது வாழ்வில் ஓர் பகுதியாக மாறியது. ஒருநாள் அல்லைப்பிட்டி ஆலயத்தில் ஓர் மூலையிலே தேடுவாரற்று தூசி படிந்த புனித அந்தோனியாரின் திருச்சுரூபத்தின் கதை பற்றி மோசஸ் என்னிடம் கூறினார் 'இந்த சுரூபம்தான் ஆரம்பத்தில் பாலைதீவில் வைக்கப்பட்டிருந்த சுரூபம் என்றும் அங்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இந்த அந்தோனியாரின் சுரூபத்தை தரிசித்து தங்கள் மீன்பாட்டுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் மன்றாடுவார்கள் என்றும் கூறினார். ஒருமுறை இங்குள்ள உண்டியல் களவாடப்பட்டது. இதைப் பார்த்துக் கோபமடைந்த மோசசின் தந்தை புனித அந்தோனியாரை நோக்கி கோபத்துடன் கதறினான். 'இங்கிருந்து நீர் என்ன செய்கின்றீர்? இங்கு உமது இருப்பின் அர்த்தம்தான் என்ன? உமக்கு கிடைக்கும் காணிக்கைகளைக்கூட உம்மால் காப்பாற்ற முடியவில்லையா?' இவ்வாறு தனது கோபத்தையும் கவலையையும் கொட்டித் தீர்த்த பின்பு இச் சுரூபத்தை படகிலேற்றி அல்லைப்பிட்டி ஆலயத்திற்கு கொண்டுவந்து சேர்ந்தார். பின்பு இச் சுரூபத்திற்குப் பதிலாக இன்னுமோர் சிறிய அந்தோனியார் சுரூபத்தை பாலைதீவிற்கு கொண்டு சென்று வைத்தார். காலப்போக்கில் இப் புதிய சுரூபம் புதுமைகள் செய்யும் சுரூபமாக யாழ் கத்தோலிக்க மக்களையும் ஆயரையும் கவர ஆரம்பித்தது.

இதேவேளை பாலைதீவிலிருந்து அல்லைப்பிட்டிக்கு மோசஸ்சின் தந்தை கொண்டுவந்த அந்தோனியார் சுரூபத்தின் பாதங்களிலிருந்து செபிக்கும் பழக்கத்தை மோசஸ் வளர்த்துக்கொண்டார். இவர் ஒவ்வொரு முறையும் கடலில் மீன் வேட்டையை முடித்துக்கொண்டு அல்லைப்பிட்டி கிராமத்திற்குத் திரும்பிவரும் போதெல்லாம் இச்சுரூபத்தின் முன் செபிப்பது மோசஸ்சின் வழக்கமாக மாறியது. இவ்வாறு இவருக்கும் அல்லைப்பிட்டி ஆலயத்திலிருந்த புனித அந்தோனியாருக்குமிடையில் உறவு ஆழமானது.

உண்டியலைக் காப்பாற்றத்தவறிய சிறிய குற்றத்திற்கு 50 வருட அல்லைப்பிட்டி சிறைவாசகத் தண்டனை அதிகம் என்று எண்ணினார் மோசஸ். இனி நான்தான் முன்னின்று காரியங்களை நடத்த வேண்டும். நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். எனவே புனித அந்தோனியாருக்கு பாலைதீவில் ஓர் அழகான ஆலயம் கட்டி சிறைப்பிடிக்கப்பட்ட அந்தோனியாரை மீண்டும் இத்தீவிற்கு கொண்டுசெல்வேன் என்று உறுதி கொண்டார்.


நினைத்ததை சாதிக்க உறுதி கொண்ட மோசஸ் தனது வலைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு 75 ஆவது வயதிலே அந்தோனியாரின் துணையோடு யாழ் மேற்றாசனத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று புனித அந்தோனியாரின் பக்தர்களிடம் பாலைதீவில் ஆலயம் அமைக்க பண உதவியை நாடினார். அந்தோனியாரின் பக்தர்கள் பலர் அள்ளிக்கொடுத்தார்கள். சிலர் அவரை விமர்சித்தார்கள். அவர் சோர்ந்து போகவில்லை. 75 வயதிலும் எடுத்த காரியத்தில் மலைபோல உறுதியாக நின்று 5 வருடங்களில் பாலைதீவில் புனித அந்தோனியாருக்கு ஒரு அழகான ஆலயத்தைக் கட்டிக்கொடுத்தார். 50 வருடங்களாக அல்லைப்பிட்டியில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த அந்தோனியார் சுரூபத்தையும் மீண்டும் பாலைதீவிற்கு கொண்டு சென்று ஸ்தாபித்தார். இவ்வாறு மோசஸ் தனது உறுதி மொழிகளை நனவாக்கினார்.

1927ல் திருவிழா நாட்கள் ஆரம்பமாகின. அந்தோனியாரை நோக்கிப் பக்தர்கள் பெருக்கெடுத்தார்கள். இவ்வேளையில் யாரும் நினையாதவாறு மோசசின் மனைவி கடும் நோயுற்று நோயில்பூசுதல் திருவருட்சாதனமும் அவளுக்கு வழங்கப்பட்டதென்ற செய்தி பாலைதீவிற்குப் பறந்து வந்தது. மோசசின் மனைவி அல்லைப்பிட்டியில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்க பாலைதீவில் மோசஸ் திருவிழா ஆயத்தங்களில் மூழ்கியிருந்தார். தன் உயிர் காத்த அந்தோனியாரைக் கைவிட்டு மனைவியிடம் ஓடுவதா?, அல்லது தரித்து நின்று அந்தோனியாருக்குப் பணி செய்வதா? என்ற போராட்டத்தில் தெளிவு பெற்றார். தரித்திருந்து திருவிழா நாட்களில் என் அந்தோனியாருக்காகப் பணி செய்வேன் என்று முடிவெடுத்தார். இவர் அந்தோனியாரைப் பார்த்து வேண்டினார் 'திருவிழா முடிந்து நான் வீடு திரும்பும்வரை என் மனைவியைக் காப்பாற்றும். நான் உமக்குப் பணி செய்யும்போது என் மனைவி இறந்தால் என் மனைவியை உம்மால் காப்பாற்ற முடியவில்லையே என்று எல்லோரும் உம்மைக் கேலி செய்வார்கள்'. பாலை தீவில் தரித்து நின்று திருவிழாக்களை முடித்த பின்பு நம்பிக்கையயோடு தன் படகை அல்லைப்பிட்டி நோக்கிச் செலுத்தினார். கரை சேர்ந்ததும் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். நோயுற்றிருந்த தன் மனைவி நோய் நீங்கி வீட்டு வாசலில் அவரை வரவேற்று நிற்பதைப்பார்த்து மோசஸ் மெய்சிலிர்த்து நின்றார்.Fr. Emile Viard (OMI) எழுதிய கட்டுரையை வாசித்த பின்பு இவரின் உறவினர் ஒருவருடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு.

**ஆக்கம்: Rev. Fr. Emile Viard OMI**
**மொழிபெயர்ப்பு: அருட்பணி. தொம்மையப்பு யேசுதாசன்**

மோசஸ் பற்றி கேட்டறிந்த போது. 'மோசஸ் புனித அந்தோனியாருடன் நெருக்கமாக வாழ்ந்த ஒரு கிறிஸ்வன். இவர் இறந்தபின்பு இவரின் உடலை மிக சிரமங்கள் மத்தியில் பாலைதீவிற்கு எடுத்துச்சென்று புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் புதைத்தார்கள்' என்றும் கூறினார். Fr. Emile Viard (OMI) இவரைப் பற்றி எழுதிய கட்டுரை மிகைப்படுத்திக் கூறப்படவில்லையென்று புரிந்துகொண்டேன்.

பாலைதீவில் அமைந்திருக்கும் புனித அந்தோனியாரின் நண்பன் மோசஸ்சின் கல்லறை புனித அந்தோனியார் வாழ்ந்த புனிதமான வாழ்வை பின்பற்ற தூண்டும் அழியாச் சின்னமாக இங்கு வரும் யாத்திரிகர்களுக்கு என்றும் அமைந்திருக்கட்டும்.




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(சரிகம, மூன்றாம்பிட்டி, மன்னார்)*

**கேள்வி: திருமணத்திற்கு முன் சிலர் நல்ல வாட்டசாட்டமாக இருக்கின்றார்கள். திருமணமாகிய பின் அவர்கள் இருப்பதே தெரிவதில்லையே! ஏன்?**

**ப:** சரிகம, ஒரு ஆண்சிங்கத்திற்குத் திருமணம் நடந்தது. அத்திருமண நிகழ்வில் ஓர் எலியார், "என் தம்பி சிங்கத்திற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்! என் தம்பி சிங்கத்திற்கு நல் வாழ்த்துக்கள்..." என சத்தம் போட்டுக்கொண்டு திரிந்தது. எலியாரை அவதானித்துக்கொண்டிருந்த ஒரு சிறுத்தை, எலியாரை மடக்கிப் பிடித்து, 'உன்னைப்பற்றி நீ என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? காலுக்குள்ளே அகப்பட்டால் நசிந்து செத்துப்போகக்கூடிய நீ, எப்படி, சிங்கத்திற்கு சகோதரனாக முடியும்? நீ ஒரு சாதாரண எலி என்பதை மனதில் வைத்துக்கொள்!' எனக் கோபத்துடன் கூறியது. எலியார் மிகவும் நிதானத்துடன், "அண்ணே! எனக்குத் திருமணம் ஆவதற்கு முன், நானும் ஒரு சிங்கமாகத்தான் இருந்தேன்!..." எனத் தன் சொந்தக் கதையை, சோகக் கதையைப் போட்டுடைத்தது!

*(தாசன், மன்னார்)*

**கே: பத்திரிகைகள் நல்லெண்ணத்தை வளர்ப்பதை விடுத்து, பிரிவினைகளைத் தூண்டுவதாகவும் பிளவுகளை ஏற்படுத்துவதாகவும் செய்திகளை வெளியிடுகின்றனவே! ஏன்?**

**ப:** தாசன், இப்போது நிறையப் பத்திரிகைகள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. எதிர்பார்க்கிற அளவில் பத்திரிகைகள் விற்பனையாவதில்லை! அதாவது, வாங்குகிற ஆள்களின் தொகை போதாது. வேறென்ன, பத்திரிகைகள் மக்களுக்கு உசுப்பேத்துகிற வகையில் செய்திகளைப் பிரசுரித்தால்தான் அவை விற்பனையாகும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செயற்படுகின்றன. இப்பேர்ப்பட்ட பத்திரிகைகள் நல்லெண்ணத்தைப்பற்றிப் பேச அடிப்படைத் தகமைகூட அற்றவை. முதலில், பத்திரிகைகளை நடத்துகிறவர்கள் தாங்கள் உண்மையோடும், நடுநிலமையோடும் நடந்துகொள்ளவேண்டும். மேலும், 'பத்திரிகைத் தர்மம்' என்று ஒன்று இருக்கிறது! அதனை, அவை காத்தே ஆகவேண்டும். அப்படி, அத்தர்மத்தைக் காக்கமுடியாதவர்கள் எப்படி நல்ல பத்திரிகை ஆசிரியர்களாக இருக்கமுடியும், நஞ்சைத்தான் கக்கமுடியும்!

*(நம்பி, யாழ்ப்பாணம்)*

**கே: 'பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க' எனத் திருமணத் தம்பதிகளுக்குக் கூறுகின்றார்கள். இக்காலத்தில் பதினாறு பெறுவது சாத்தியமா?**

பதில்: தம்பி நம்பி, 'பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க' என்ற கூற்றின் மூலம் நீங்கள் பதினாறு பிள்ளைகளைப் பெற்றெடுப்பதாக நினைத்துவிட்டீர்கள் போலும்! நல்ல காலம், இக்கட்டத்திலாவது இச்சந்தேகத்தினைக் கேட்டு தெளிவுபடுத்த முனைந்துள்ளீர்கள். இல்லையேல், உங்கள் துணைவியாரின் நிலை கவலைக்கிடமான, பரிதாபகரமான நிலையில்தான் வந்து முடிந்திருக்கும்! 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்று கூறுப்படுவது ஒரு மனிதன் பெற்றுக்கொள்ள வேண்டிய பிள்ளைகளின் தொகையை அல்ல, ஒருவர் பெறவேண்டிய நற்பண்புகள், பேறுகள், ஆசிகள் அல்லது கொடைகள் என்று சொல்லலாம். அவை எவையெனில்! நன்மக்கள், செல்வம், அழகு, நோயின்மை, இளமை, கல்வி, வாழ்நாள், நல்வினை, பெருமை, துணிவு, வலிமை, வெற்றி, நல்லுணர்வு, புகழ், நுகர்ச்சி, நல்ல நண்பர் ஆகியவையாகும். நம்பி, பதினாறு பேறுகளில் ஒன்றுதான் நன்மக்கள்!

*(ராஜி, யாழ்ப்பாணம்)*

**கே: சில பெரியவர்கள் பெரிய மனதோடு நடந்துகொள்கின்றார்கள் இல்லையே! இப்பெரிய மனிதர்கள் மிகச் சிறுமைத்தனத்துடன் பல சந்தர்ப்பங்களில் நடந்துகொள்கின்றார்களே? இவர்களை எப்படிப் பெரியவர்களாகக் கொள்ளலாம்?**

**ப:** 'உயரமாக வளர்ந்து நிற்கும் மரங்கள் எல்லாம் உயர்ந்த மரங்கள் அல்ல' என்ற வரியொன்று என் நினைவுக்கு வருகிறது. இவ்வரியினை வார்த்தைக்கு வார்த்தை நோக்கினாலென்ன, வார்த்தைகளுக்கு இடையில் இருக்கும் அர்த்தத்தினை நோக்கினால் என்ன, அது உணர்த்தும் பொருள் ஒன்றுதான்! மேலும், 'பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்'(18) என்றொரு கூற்று ஔவையாரின் நீதிநூல்களில் ஒன்றான 'வெற்றி வேற்கை' யில் உண்டு. இதன் பொருள், உடல் அமைப்பிலும் உடல் அலங்காரத்திலும் பெரியோர்போலக்காட்சிஅளிப்பவர் அனைவரும் உண்மையான பெரிய மனிதர்கள் அல்லர் என அமைகிறது. ஆக, பெரியவர் என்ற பெருமைக்கு ஒருவரின் பருமனை, பாரத்தை, பதவியை வைத்துப் பார்க்கமுடியாது என்பது இதிலிருந்து உறுதியாகிறது!

*(ரி.கலிஸ்ரன், மல்லாகம்)*

**கே: காதல் என்பது என்ன?**

**ப:** இதன் முதன் பொருளைச் சொன்னால், இளவயதில் ஏற்படும் இனக்கவர்ச்சி எனலாம்!

*(செல்வி, திருகோணமலை)*

**கே: பிள்ளைகள் 'ரியூசன்'க்கு போவதிலேயே முழுப்பொழுதும் போய்விடுகின்றது! இன்றைய 'ரியூசன்' வகுப்புக்கள் மாணவர்களுக்கு நன்மை பயக்குகின்றனவா? இதுபற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

**ப:** மெதுவாகக்கற்கும்மாணவர்களுக்கும், சில பாடங்களில் மேலதிக உதவிகள் தேவைப்படுகிறமாணவர்களுக்கும்பிரத்தியேக வகுப்புக்கள் ('ரீயூசன்' போன்றவை) உதவிசெய்யும். ஆனால், 'ரீயூசன்' வகுப்புக்கள் இப்போது ஏறக்குறைய 'புறொயிலர்' கோழி வளர்ப்புப்போல ஆகியிருக்கிறது! இன்று, பிள்ளைகள் திங்கள் தொடக்கம் சனிக்கிழமை வரை எவ்வாறாக இயங்குகிறார்கள் என்பதைப் பல பெற்றோர் எண்ணிப்பார்ப்பதில்லை. பிள்ளைகள் காலை 5.30க்கு எழுந்து, 6மணிக்கு 'ரியூட்டறி'க்குப் போய், 6.45க்கு வீடு வந்து, சாப்பிட்டுவிட்டு, ஏனைய அவசரத் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு பாடசாலையில் 7.30க்கு நிற்கிறார்கள். பாடசாலை 1.30க்கு முடிந்ததும் வீடுசென்று, மீண்டும் பிற்பகல் 3மணிக்கு 'ரியூட்டறி' சென்று, மாலை 6.15மணியளவில் வீடுவந்து சேர்கிறார்கள். வந்ததும் தேனீரைக் குடித்துவிட்டு மீண்டும் கற்றலில் இறங்கவேண்டும். இங்கு, பிள்ளைகள் சேர்ந்து விளையாட, ஓய்வெடுக்க, தனியாகப் படிக்க, கலைவடிவங்களைப் பயில எங்கு நேரமிருக்கிறது? இவர்களால் எப்படி சுயமாகச் சிந்திக்க முடியும்? பெரும்பாலும் இப்போது திணிப்புத்தான் நடைபெறுகிறது! இறைச்சிக்காகக் கோழிகள் வளர்க்கப்படுவதுபோல இங்கு நம் பிள்ளைகள் ஏதோ ஒன்றை அடைவதற்காக வளர்க்கப்படுகிறார்களா என்பதைப் பெற்றோர் எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும், 'ரியூசன்' ஒரு 'மொடல்' ஆகவும் மாறிவருகிறது. 'ரியூசன்', தங்களுடைய பிள்ளைகளுக்குத் தேவையா, இல்லையா என்பதையெல்லாம் நோக்காமல், எல்லாப் பிள்ளைகளும் 'ரியூசன்'க்குச் செல்வதால் தங்கள் பிள்ளைகளையும் அனுப்புகிறார்கள்! பிள்ளைகளை ஏற்றி இறக்குவதில் பெற்றோர் கலைபட்டுத் திரிவதைப் பார்த்தால் பாரதியின் 'நெஞ்சு பொறுக்குதில்லையே...' என்ற பாடல்தான் நினைவுக்கு வரும்! இவர்களுக்கு ஏற்றால்போல் இப்போது இந்தியன் 'ஸ்கூட்டிப் பப்'பும் வந்திருக்கிறது. தாய்மார் 'ரீயூசன் சென்றர்'க்கும் வீட்டுக்கும் இடையில் ஒரு 'மினி சேவிஸ்'சையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

*(சுதா, வவுனியா)*

**கே: நமது வாழ்க்கை கொஞ்சக் காலந்தான் என்பதை மனதில் பதியும் படி சிலருக்குப் புரியவைக்க முடியுமா?**

**ப:** 'என்ன குழந்தை?, எந்தப் பாடசாலை?, என்ன வேலை?, என்ன சம்பளம்?, எப்ப திருமணம்?, எத்தனை குழந்தைகள்?, உடம்புக்கு என்ன?, செத்திற்றாரா?' இதற்குள் தான் ஐயா வாழ்க்கை! இதற்குள் எத்தனை ஆட்டம்? எத்தனை ஓட்டம்? எத்தனை அதிகாரம்? எத்தனை அகங்காரம்?

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**ஆயர் செமேரியாவின் (கல்வி சம்பந்தமான) அருட்பணி மடல் (தொடர்ச்சி...)**

6. இப்படியாகக் கத்தோலிக்க மதத்தில் சரியான அடித்தளமிடப்படாத ஒரு பிள்ளைஒருபுரட்டஸ்தாந்துபாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். இங்கு எதிர்கொள்ளும் சவால்களை இந்தப்பிள்ளை எதிர் கொள்ளுமா? கத்தோலிக்க கோட்பாட்டிலும், ஆன்மீகத்திலும் தகுந்த தயாரிப்பும், பாதுகாப்புமில்லாத இப்பிள்ளையின் நிலைமை பலவீனமான பாதுகாப்பு அரண்களையும், தயாரிப்பில்லாத ஒரு இராணுவத்தையும் கொண்ட ஒரு கோட்டை நன்கு திட்டமிடப்பட்டு பலமான ஒரு இராணுவஅணியினால் தாக்கிக்கைப் பற்றப்படும் நிலைக்குள்ளாகும் என்பதில் ஐயமில்லை. புரட்டஸ்தாந்து பாடசாலைகளில் ஒவ்வொருநாளும், ஒவ்வொரு பாடமும் கத்தோலிக்க பிள்ளைகளை தமது பக்கம் ஈர்ப்பதற்கென்றே திட்டமிடப்பட்டு மிகவும் சாதுரியமாக அரங்கேறுகின்றன. கவனமாக வடிவமைக்கப்பட்ட இவ்வலைப்பின்னலிலிருந்து தப்பி வெளியேறுவது கத்தோலிக்க பிள்ளைகளுக்கு முற்றிலும் முடியாத காரியமாகவேயிருக்கும். புவியியல், வரலாறு, ஏன் வாசிப்பதற்கான பயிற்சி முதலாக கத்தோலிக்க பிள்ளைகளைத்தமது சமயத்துக்கீர்க்கும் வகையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். அத்துடன் கத்தோலிக்க கோட்பாடுகளும், கத்தோலிக்க பிள்ளைகளும் நகைப்புக்கிடமானவையாகவோ, ஏளனத்துக்குரியவர்களாகவோ சித்தரிக்கப் படுவதால் கத்தோலிக்க பிள்ளைகள் விரைவில் புரட்டஸ்தாந்து பிள்ளைகளாக மாறுவதைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்? ஒரு வேளை தனது குடும்ப, அல்லது சார்ந்த சமூக கட்டமைப்பிலிருந்து விடுபட்டு வெளிப்படையாக ஒரு கத்தோலிக்க சமய மறுப்பாளராக (apostate) மாறாவிட்டாலும் புரட்டஸ்தாந்து பாடசாலைக்கு அனுப்பப்படும் கத்தோலிக்க மாணவர் அங்கிருந்து வெளியேறும் போது கத்தோலிக்க சமயத்தில் எதுவித பற்றும், ஈடுபாடுமில்லாத, வெதுவெதுப்பான, இறைநம்பிக்கையில்லாத, பிறகத்தோலிக்கருக்கு இடறலாக உள்ளவராகவும், அனேகமாக தமது பங்குக்குருவுக்கு சதா தொல்லை கொடுப்பவருமாகவும் நடைமுறையில் ஒரு அஞ்ஞானியாகவும், ஆயக் காரனைப்போலவுமேயிருப்பர்.

7. யாழ் திருத்தூது மாவட்டத்தின் இப்படியான ஆரோக்கியமற்ற நிலை எவ்வளவு தூரத்திற்கு எனக்கு வேதனையையும் அங்கலாய்ப்பையும் தந்திருக்கும் என இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும். எனவே எம்மை அச்சுறுத்தும் இப்படியான தீமைகளை வெற்றி கொள்வதற்குத்தரமான கத்தோலிக்க பாடசாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இல்லாவிடில் கத்தோலிக்க சமயம் தற்போது வளர்ந்துவரும் இத்தலைமுறையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தவறிவிடும். அத்துடன் இத்தலைமுறை ஒன்றில் கத்தோலிக்க மதக்கோட்பாடுகளை அறியாது, மதநம்பிக்கை இல்லாதவர்களாகவோ, கத்தோலிக்க மதத்திற் கெதிரானவர்களாகவோ உருவாகுவர். எனவேதான் இத்திருத்தூது மாவட்டம் எனது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டவுடனேயே எனது மனதில் உள்ள முக்கிய குறிக்கோளாகிய தரமான கத்தோலிக்க பாடசாலைகளைஉருவாக்குவதற்கு இங்குள்ள களநிலைமைகள் எவ்வாறு சாதகமாகவிருக்கும் என்பதைப்பரிசீலிக்கலானேன்.

(தொடரும்....)

## ஆசிரியர்கள், மறையாசிரியர்கள்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

அருட்பணி பெனற் அடிகளாரின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இத்தியானத்தில் யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை மறைக்கோட்டங்களைச் சேர்ந்த 225 ற்கும் அதிகமானவர்கள் கலந்து பயன்பெற்றார்கள். இத்தியானத்தை அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி பிலிப் றஞ்ஞனகுமார் அடிகளார் "தடைகள் வரினும் பணியில் தளர்வடையாதீர்கள்" என்ற தொனிப்பொருளில் நெறிப்படுத்தினார். அவர் தனது உரையில் தற்காலத்தில் கத்தோலிக்க ஆசிரியர்கள், மறையாசிரியர்கள் தமது பணியில் எதிர்கொள்ளும், சுயநலப்பற்றுக்கள், கௌரவப் போட்டி, பொறாமைகள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து வரும் தடைகள் பணிபுரியும் பங்கிலிருந்து எழும் விமர்சனங்கள் போன்ற சவால்களைச் சுட்டிக்காட்டி, இவற்றால் பணிவாழ்வில் சோர்வடைந்து போகிறார்கள் என்பதைக் கூறினார். அத்துடன் இச்சவால்களை மேற்கொள்ள இயேசு எமக்குச் சிறந்த முன்மாதிரியாக உள்ளார். எனவே தமது வாழ்வில் சந்தித்த சவால்களைத் துணிவுடன் மேற்கொண்டதுபோல அவரோடு இணைந்து பணிவாழ்வில் வரும் தடைகளை மேற்கொண்டு பணிபுரிவோம் என்று கூறினார்.

## யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்வு - 2018
### முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவ, மாணவியரின் விபரங்கள்

| தரம் | மாணவர் பெயர் | பாடசாலையின் பெயர் | நிலை |
|---|---|---|---|
| 03 | பார்த்தீபன் ஜஸ்வரியன் | யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி | 1ம் இடம் |
| | யுஸ்வினா செல்வமதன் | யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை | 2ம் இடம் |
| | திருவருட்செல்வன் சயந்தன் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | 3ம் இடம் |
| 04 | அபிஹெயில் ஷெறா ஷெல்ரன் | யா/ புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம் | 1ம் இடம் |
| | தஜேந்திரகுமார் நிலாஜினி | நெடுந்தீவு சீக்கிரியம்பள்ளம் அ.த.க. பாடசாலை | 2ம் இடம் |
| | அமலானந்குமார் ரினுக்ஸ் அன்ரனி | யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை | |
| 05 | அ. ஜறிணி | யா/ புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம் | 1ம் இடம் |
| | மேரி ஷெறோனா சில்வெஸ்ரர் லக்ஸன் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | 2ம் இடம் |
| | மயூரன் மலரினி | கிளி/ செம்பன்குன்று அ.த.க. பாடசாலை | 3ம் இடம் |
| 06 | சரோமி றொசைறோ | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 1ம் இடம் |
| | கிஷாந்தினி தஸ்மன் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | 2ம் இடம் |
| | யோசவ் இம்மானுவேல் டல்சிகா | யா/ மாதகல் சென். யோசேப் வித்தியாலயம் | 3ம் இடம் |
| 07 | நிலுசா பீற்றர் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | 1ம் இடம் |
| | மெல்ஷா அமல தினேஸ் கூஞ்ஞ | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 2ம் இடம் |
| | ஆறுமுகம் சானுஜன் | யா/ ஊர். புனித அந்தோனியார் கல்லூரி | 3ம் இடம் |
| 08 | அன்ரனி டிநேஸ் அப்சிகா | யா/ கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகா வித்தி. | 1ம் இடம் |
| | ல. உ. ற. லசிக்கா | யா/ கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை | 2ம் இடம் |
| | டி. மெபோனா | யா/ நாரந்தனை றோ.க. பாடசாலை | 3ம் இடம் |
| 09 | டினோஷா கனிஸ்லாஸ் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | 1ம் இடம் |
| | மேவினா வசந்தகுமார் | மு/ முல்லைத்தீவு றோ.க.த. மகளீர் பாடசாலை | 2ம் இடம் |
| | பாலமனோகரன் ரெபேக்கா | கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம் | 3ம் இடம் |
| 10 | மானுகா கிருஸ்ண வசீகரன் | யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தி | 1ம் இடம் |
| | ரிசானா புவனதாஸ் | யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி | 2ம் இடம் |
| | ப. சுவேந்தினி | யா/ மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை | 3ம் இடம் |
| 11 | பி. மேரி யூலியற் | யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | 1ம் இடம் |
| | தோ. சுவாங்கி | யா/ பரு.மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை | 2ம் இடம் |
| | அன்ரன் யோண்டில் நிரேகா | மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 3ம் இடம் |


விண்ணக வாழ்வின் 10ம் ஆண்டு நினைவு — விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு நினைவு



மண்ணில் 27.03.1942 விண்ணில் 27.03.2009
பிரான்சிஸ் சேவியர் ஞானத்தம்மா (தங்கமணி)

மண்ணில் 27.04.1933 விண்ணில் 07.06.2015
யோமிஸ் பிரான்சிஸ் சேவியர் (துரைசிங்கம்)

"நீர் இன்று என்னோடு வான் வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்"

விண்ணக வாழ்வு கண்டு ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
கண்ணின் மணிகளைப் போல் எம்மைப் பேணி வாழ்வித்தவர்களே!
உங்கள் நினைவு என்றும் அழியாது. நீவிர் இறைவனின் இல்லத்தில்
இன்புற்றிருக்க - எம் இதயத்தின் ஆழத்தில் இருந்து வேண்டுகின்றோம்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27.03.2019 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு புனித செபஸ்ரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

5ம் வட்டாரம், இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்

AD 25



## 1ம் வருட நினைவு அஞ்சலி



மண்ணில் 31 . 12 . 1937
விண்ணில் 30 . 03 . 2018

அமரர் செல்வராணி சூசைமுத்து

ஓராண்டு ஓடிவிட்டது
உம் நினைவுகளைச் சுமந்தபடி
ஆயிரம் உறவுகள் சூழ இருந்தும்
உம் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது
எங்கள் எழுவரையும் உருவாக்க
எமக்காகப் பல தியாகங்கள் செய்தீர்கள்
என்றும் எங்களுடன் நீங்கள் உடனிருக்கிறீர்கள்
எமக்காக வானக தந்தையிடம் பரிந்துரைக்கிறீர்கள்
நித்தம் நினைந்து எமது செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்
உம் ஆன்மா ஆண்டவரில் என்றும் அமைதி அடைவதாக

49/7, கோவில் வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

AD 24



## விற்பனைக்கு

புனித வளன் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில் தவக்கால பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் மற்றும் திருச்சிலுவை சொரூபங்கள் என்பன மலிவான விலையில் விற்பனைக்குண்டு.

கத்தோலிக்க அச்சகத்தில் **Mug Printing** செய்து கொள்ளலாம்.


### பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திரு-நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தை பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பே னென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறை வேறும். இச் செபத்தை பிரசுரிப் பதாக வாக்குப்பண்ணவும் . ஓர் அடியாள்


## விண்ணக பிறப்பின் 31ம் நாள்



மண்ணக பிறப்பு 08 . 07 . 1938
விண்ணக பிறப்பு 04 . 03 . 2019

அமரர்
எஸ். எஸ். செபரத்தினம்
(இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்)

வாழ்வின் நல் வழிகாட்டியே
நாமும் உலகில் ஏற்றம் பெற
உம் மரணத்தாலும்
இறைமனித உறவின் ஏணியாகினீர்
எமக்காய் இறைவனிடம் வேண்டிடுவீர்

எமது குடும்ப தலைவரின் விண்ணகப்பிறப்பின் 31ம் நாள் திருப்பலி எதிர்வரும் 03.04.2019 அன்று காலை கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து செல்லுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இராச வீதி,
கோப்பாய் மத்தி
கோப்பாய்

பிரிவால் துயருறும்
மனைவி
பிள்ளைகள்

AD 23



## விண்ணக வாழ்வின் 5ம் வருட நினைவஞ்சலி



மண்ணுலகில் 06 . 02 . 1928
விண்ணுலகில் 28 . 03 . 2014

அமரர்
திருமதி.அந்தோனிப்பர்னாந்து செலீனம்மா

"ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" தி.பா. 27:4.

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வில் வழிகாட்டியாய்
எம் வாழ்வின் ஒளியேற்றிய எம்
அன்பு அம்மாவே
நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க
வேண்டுகின்றோம்

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

5ம் வட்டாரம்
மண்டைதீவு

AD 17



## 9ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 . 03 .
உதிர்வு 01 . 04 . 2010

அமரர்
திருமதி. மேரி யோசவின் பாக்கியநாதர்
[இளைப்பாறிய ஆசிரியர்]

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" [யோவான் 11:25]

காலம் உன்னை கவர்ந்து சென்று ஒன்பது
ஆண்டுகள் கடந்தாலும் காலத்தால் அழியாத
உம் அன்பும், பாசமும் எம்மை விட்டு
என்றும் நீங்காத கனத்த உள்ளத்துடன்.

கணவர் - அ. பாக்கியநாதர்
பிள்ளைகள்- றெறி, றொகான் றதீஸ்குமார்
மருமக்கள் - நிஜிதா, வதனி, தயாளினி
பேரப்பிள்ளைகள் - மேரி றியாங்கி, ஜெறோம், ஆன் செரன், ஆன் சிரோனி

கல்லூரி வீதி,
மானிப்பாய்

AD 20



## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 11 . 05 . 1955
இறப்பு 27 . 03 . 2016

அமரர்
கனகராஜா மரியகொறற்றி
(நேசராணி)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

ஈர விழிகள் இன்னும் காயவில்லை
இதயத்தின் வேதனைகள் இன்னும்
குறையவில்லை இறைவடி இணைந்து
மூன்றாண்டுகள் நிறைந்ததம்மா
உமது நினைவுகள் எம்மில்
வேரூன்றி உள்ளது
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உம் நினைவாய் வாழ்ந்து உமது
ஆன்மா அமைதி பெற வேண்டுகின்றோம்

நாவலர் வீதி
நாவாந்துறை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD 21



## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 . 05 . 1924
இறப்பு 01 . 04 . 2009

அமரர்
நீக்கிலான் வின்சன் டி போல்
(அண்ணாவியார் கலாபூசணம்)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார் (யோ. 11:25)

காலன் உன்னை கவர்ந்து சென்று
ஆண்டுகள் பத்து கடந்தாலும்
காலத்தால் அழிக்க முடியாது
உன் அன்பும் ஆலோசனைகளும்
தூரநோக்கும் துணிவு கொண்ட
உம்மை தவறவிட்டு
தவிக்கிறோம்.

74/3, கடற்கரை வீதி
நாவாந்துறை

குடும்பத்தினர்

AD 22

# ஆயருடனான சந்திப்புக்கள்

## அமெரிக்கத் தூதுவருடன்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி அலெய்னாரெப்பிலிஸ் கடந்த 07.03.2019 யாழ் ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து வடக்கின் சமகால அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றிக் கலந்தாலோசித்தார்

## பிரித்தானியத் தூதுவருடன்



இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் திரு ஜேம்ஸ் டவுரிஸ் கடந்த 06.03.2019 யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து வடக்கின் சமகால நிலவரம் குறித்துக் கலந்தாலோசித்தார்

# திருமறைக்கலாமன்றத்தின் திருப்பாடுகளின் ஆற்றுகைகள்



வருடந்தோறும் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பினை சித்திரிக்கின்ற திருப்பாடுகளின் காட்சிகளை மேடையேற்றுவதனை தமது கடமையாகக்கொண்டு கடந்த 55 ஆண்டுகளாக அப்பணியினை மேற்கொள்ளுகின்ற திருமறைக்கலாமன்றமானது இவ்வருடமும் வெவ்வேறு இடங்களில் பாடுகளின் ஆற்றுகைகளை மேடையேற்றுகின்றது.

### அன்பில் மலர்ந்த அமரகாவியம்

வருடந்தோறும் யாழ்ப்பாணத்தில் திருமறைக்கலாமன்றம் நடத்துகின்ற திருப்பாடுகளின் ஆற்றுகையானது இவ் வருடம் பிரமாண்டமான படைப்பாக அன்பில் மலர்ந்த அமர காவியமாக ஏப்ரல் மாதம் 11.12.13.14 ஆம் திகதிகளில் மேடையேற்றப்பட இருக்கின்றது. அருட்திரு நீ. மரிய சேவியர் அடிகளால் எழுதப்பட்ட மேற்படி ஆற்றுகையானது திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர் கலாபூஷணம் எவ்.யூல்ஸ் கொலின் அவர்களினால் நெறிப் படுத்தப்படுகின்றது. இறைவனின் அளவற்ற அன்பினை வெளிப்படுத்துகின்ற மேற்படி ஆற்றுகையானது 1968 ஆம் ஆண்டு எழுதப்பட்டு உரும்பிராயில் மேடை யேற்றப்பட்டது. தொடர்ந்து 1971 ஆம் ஆண்டு கோட்டையைப் பின்னணியாகக்கொண்டு பிரமாண்டமான படைப்பாக மேடையேற்றப்பட்டது. இறுதியாக அவ்வாற்றுகையானது மீளுருவாக்கம் செய்யப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வருடமும் 150 க்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்களிப்புடன் இவ்வாற்றுகையானது மேடையேற யிருக்கின்றது.

### பலிக்களம்

இவ்வருடம் திருமறைக்கலாமன்றத்தின் மற்றொரு தயாரிப்பாக பலிக்களம் ஆற்றுகையானது முல்லைத்தீவு மறைக்கோட்டத்துடன் இணைந்து ஏப்ரல் 7ஆம் திகதி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளினால் எழுதப்பட்ட மேற்படி ஆற்றுகையினை திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞரும் ஆசிரியருமான ஏ.ஆர். விஜயகுமார் அவர்கள் நெறிப்ப டுத்துகின்றார். எழுபதுகளிலிருந்து பலதடவைகள் திரு மறைக் கலாமன்றத்தினால் மேடையேற்றப்பட்ட மேற்படி ஆற்றுகையானது பலராலும் விரும்பப்படுகின்ற படைப் பாகும். ஈழத்தில் முதல் முதலில் வீடியோ திரைப் படமாகவும் இது தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர், குருக்களின் ஆதரவுடன் முல்லைத்தீவு மறைக்கோட்டக் கலைஞர்கள் பலரும் இணைந்து அளிக்கின்ற பிரமாண்டமான படைப்பாக இது மேடையேறுவது குறிப்பிடத்தக்கது.

### வெள்ளியில் ஞாயிறு

இவை தவிரவும் நாடுகடந்து பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தினால் வெள்ளியில் ஞாயிறு என்ற திருப்பாடுகளின் ஆற்றுகை ஏப்ரல் 7ஆம் திகதி பரிசில் மேடையேற்றப்படுவதும் குறிப்பித்தக்கது. அருட்கலாநிதி மரிசேவியர் அடிகளும், யோண்சன் ராஜ்குமாரும் இணைந்து எழுதிய மேற்படிப் படைப்பானது. பிரான்ஸ் திருமறைக்கலாமன்ற இணைப்பாளர் டேமியன் சூரி அவர்களினால் நெறிப்படுத்தப்படுகின்றது. இப்படைப்பு கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றபட்டமை குறிப்பிடத்தக்கது.

# உரும்பிராயில் சிலுவையின் அதிர்வுகள்

சிலுவையின் அதிர்வுகள் எனும் கருப்பொருளில் திருப்பாடுகளின் காட்சியானது எதிர் வரும் சித்திரை மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் ஆற்றுகைப் படுத்தப்படவுள்ளது. பங்குமக்கள் இணைந்து பங்கேற்கும் இவ்வாற்றுகையானது திரு.எஸ். யலாகன் தயாரிப்பில் பங்குத்தந்தை அருட்பணி எம். பத்திநாதன் அடிகளாரின் நேரடி நெறியாழ்கையில் அரங்கேறவுள்ளது. இத் தவக்கால ஆற்றுகையில் 90க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்பதுடன் 110அடி மேடையில் நடைபெறவுள்ளதாக அருட்தந்தை பத்திநாதன் அடிகளார் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

# பசாம் வாசித்தல் போட்டி

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக் குழுவினரால் யாழ். மறைமாவட்டத்திலுள்ள ஆறு மறைக்கோட்டங்களிலும் இயேசுவின் பாடுகளை விளக்கும் வியாகுல பிரசங்கங்களைப் பாடும் பசாம் வாசித்தல் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எமது பாரம்பரிய கலைகளில் ஒன்றாகிய பசாம் வாசித்தலை ஊக்குவிப்பதும், பொதுநிலையினரின் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதும், தவக்காலத் தியானங் களில் மக்களை ஈடுபட வைப்பதுமே இப்போட்டிகளை நடாத்துவதன் நோக்கமென பொதுநிலையினர் ஆணைக் குழு இயக்குனர் அருட்பணி. யோ.யோ. மெளலிஸ் அடிகளார் தெரிவித்தார்.

# பரு. மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தின் பொதுக்கூட்டம்

பருத்தித்துறை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத்தின் பொதுக்கூட்டம் 2019.03.09 ஆம் திகதி அன்று காலை 10.00 மணியளவில் கழகத்தின் தலைவர் திரு வின்சன் டிபோல் அவர்களின் தலைமையின் கீழ் மிருசுவில் பங்கின் துணை ஆலயமான கச்சாய் புனித பேதுரு ஆலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பருத்தித்துறை மறைக்கோட்டத்துக்குட்பட்ட ஆலயங்களின் பிரதிநிதிகளும் மிருசுவில் பங்கின் துணை ஆலயங்களின் பொது நிலையினர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு சிறப்புரை ஆற்றுவதற்காக மிருசுவில் பங்குத்தந்தையும் யாழ் மறை மாவட்ட வழிபாட்டு ஆணைக்குழு இயக்குனருமாகிய அருட்பணி X.W ஜேம்ஸ் அடிகளார் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் தமது சிறப்புரையில் திருவழிபாடு, அருட்அடையாளங்கள், பக்திமுயற்சிகள், மரியன்னை, புனிதர் வணக்கங்கள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டது. மேலும் யாழ் மறைமாவட்ட வழிபாட்டு ஒழுங்குமுறை பற்றியும் கருத்துரை வழங்கினார். அத்துடன் இக்கூட்டத்திற்கு பருத்தித்துறை மறைக்கோட்ட இயக்குனர் அருட்பணி A.J.யாவிஸ் அடிகளார் அவர்களும் பருத்தித்துறைப் பங்கின் உதவிப் பங்குத்தந்தை அவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# குருக்களுக்கான தியானம்

யாழ். மறைமாவட்டக் குருக் களுக்கான தவக்கால முழு நாள் தியானம் கடந்த 20ம் திகதி பங்குனி மாதம் சாட்டித் திருத் தலத்தில் நடைபெற்றது இத்தியான நாளின் கருத்துரைகளை மன்னார் மறைமாவட்ட அருட்பணி றெஜி னோல்ட் அடிகளார் வழங்கினார். அந்நாளில் திருச்செபமாலை, திருச் சிலுவைத் தியானம், பாவசங் கீர்த்தனம், நற்கருணை ஆசீர் என்பன இடம்பெற்றன.

இம் முழுநாள் தியானத்தில் மறைமாவட்டத்தின் பங்குகளிலும் நிறுவனங்களிலும் பணியாற்றும் அனைத்துக் குருக்களும் பங்கெடுத்தனர்.

# ஆயர் தலைமையில் உறுதிப்பூசுதல்

**பேராலயத்தில்**



யாழ் ஆயர் அவர்களினால் கடந்த 10.03.2019 அன்று 76 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது

**குருநகரில்**



யாழ் ஆயர் அவர்களினால் கடந்த 17.03.2019 அன்று 124 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது



மாஞ்சோலை வைத்தியசாலையின் அற்புதக் குழந்தை இயேசு ஆலயத் திருவிழா யாழ் மறை மாவட்டக் குருமுதல்வர் ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



முள்ளியவளை புனித திரேசம்மாள் ஆலய சிறார்களுக்கான முதன்நன்மை அருட்சாதனம் அருட்பணி S.J. இம்மானுவேல் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

# மரியாயின் சேனை "ஆச்சேஸ் விழா"



ஆச்சேஸ் விழா யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்பணி. S.J. இம்மானுவேல் அடிகளாரின் சிறப் புரையுடன் அருட்தந்தை யோ.யோ.மவுலிஸ் மற்றும் இயக்குனர் அருட்பணி. றெஜி இராஜேஸ்வரன் அடிகளாரும், முல்லை மறைக்கோட்டப் பொறுப்பாளர் அருட்பணி நிக்சன் கொலின்ஸ் அடிகளாரும் இணைந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர்.



அனுராதபுரம் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையத்தில் 08.03.2019 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்ற 75 வது தேசிய இளையோர் ஒன்றுகூடலில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர்.

புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்
டிஜிற்றல் அச்சுத்தரத்தின்
முன்னோடிகள்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.